# நம்வழி வேளாண்மை


| பருவம் 34 | ஏப்ரல் – ஜுன் 2026 | இதழ் 1 |
|---|---|---|





**இந்திய புல்வெளி, தீவன ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்**
**சூழலியல் பாதுகாப்பு அறக்கட்டளையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**
**நாள்: 13.04.2026, இடம் : ஜான்சி**

*இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்*
*மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 34 ஏப்ரல் – ஜுன் 2026 இதழ் 1

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம்
### பிற மொழி இதழ்கள்

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பல்லி ஸ்ருஜானா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே |


**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர், –3 வது தெரு
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 9344523892.
இமெயில் vivekseva@gmail.com



**ஆங்கில இதழ் முகவரி**
Prof. Anil Gupta,
**Honey Bee,**
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org


### தானம் தர்மம்

ஒரு வீட்டு வாசலில் யாசகன் ஒருவன் தர்மம் கேட்டு நின்றிருந்தான். அம்மா.... தாயே.... ஏதாவது தர்மம் பண்ணுங்கம்மா. அந்த வீட்டு பெண்மணி வெளியே வந்து பார்த்தாள். அங்கே வீதியில் விளையாடிக் கொண்டு இருந்த, தனது ஐந்து வயது மகளை அழைத்து, அவளது கைகளால் ஒரு பிடி அரிசியை அள்ளி கொடுத்து, யாசகனின் பாத்திரத்தில் இடச் சொன்னாள். பெற்றுக் கொண்ட யாசகனும், பக்கத்து வீட்டுக்குப் பிச்சை கேட்க சென்றான். அந்த பெண்மணியும் விளையாடிக் கொண்டிருந்த தனது மகளை கூப்பிட்டு, அவளது கையால் அரிசியை அள்ளி யாசகனுக்கு பிச்சை அளிக்கச் சொன்னாள். காலங்கள் உருண்டோடின....... இரண்டு பெண்மணிகளுக்கும் வயது முதிர்ந்து போனது. இரு சிறுமிகளும் வளர்ந்து பெரியவர்களாகினர். அவரவர்கள் தத்தம் தாய் காட்டிய வழியில் தர்மங்களும் தொடர்ந்தன..... ஒரு நாள், அந்த முதிய பெண்மணிகள் இருவருமே இறந்து வானுலகம் சென்றனர். அங்கே, அந்த முதல் வீட்டு பெண்மணிக்கு சொர்க்கத்தில் இடம் கிடைத்தது. மற்றவளுக்கோ அதற்கு கீழான இடமே கிடைத்தது. உடனே, அவள் இறைவனிடம் பதறிக் கதறியே முறையிட்டாள். ‘இருவருமே ஒரே மாதிரி தானே தானம் செய்தோம். எனக்கு மட்டும் இங்கே ஏன் இந்த பாரபட்சம், ஏற்ற இறக்கம்’ என்று வாதிட்டாள்.

அதற்கு இறைவனோ..... முதலாமவளோ, தனக்கு பிறகும், தன் குழந்தையும் இந்த தானத்தை தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், குழந்தையின் கையில் அரிசியைக் கொடுத்து தானம் செய்ய சொன்னாள். ஆனால், நீயோ.... உன் கைகளால் எடுத்தால், அரிசி நிறையவே செலவாகும் என்ற எண்ணத்திலே, உன் குழந்தையின் கையால் எடுத்தே தானமிடச் செய்தாய்... இருவரது செயலும் ஒன்றே. எனினும் எண்ணங்கள் வெவ்வேறு என்றார். எனவே, எந்த செயலை செய்தாலும், மேலான எண்ணங்களோடு செய்யும் செயல்களே நம் வாழ்க்கைக்கும் தொழிலுக்கும், ஆத்ம திருப்திக்கும், மனநிறைவான உணர்வுக்கும் வழி காட்டும்.

சுய லாபத்துக்காக செய்யும் செயல்களை விட, பொது நலத்துக்காக செய்யும் செயல்களே வலிமை வாய்ந்தவை, மேலானவை. அதுவே இறைவனின் நியாயத் தராசில் எப்போதும் உயர்ந்தே நிற்கும்.

– நன்றி இணைய வழி கதை

## எது உன்னத உணவு

உணவு உயிரை நிலைநிறுத்துகிறது. உண்ணும் உணவும் பருகும் நீரும் இல்லையெனில் உயிர் வாழ்வது கடினம். மனிதன் பல ஆண்டுகளாக செய்து வந்த பரிசோதனையின் மூலமாகவே தற்போது நடைமுறையிலுள்ள உணவுமுறை சிறந்ததென அனுசரிக்கப்படுகிறது. முதலில் மனிதன் வேட்டையாடி அசைவ உணவு, காட்டு காய், கனிகளை உண்டுவந்து பின் சமைக்கத் தொடங்கி அது சீர் செய்யப்பட்டு தற்பொழுதுள்ள உணவு பழக்கங்கள் அமைந்ததெனில் அது மிகையாகாது. எந்த உயிருக்கும் தீங்கு விளைவிக்காமல் இருக்கவே அசைவம் தவிர்க்கப்பட்டது. இதையை வள்ளுவரும்

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. என

உரைக்கின்றார். தாவரங்களுக்கும் உயிருண்டா எனில் அது உயிருள்ளது என்றே அறியப்படுகிறது. அப்படியெனில் தாவர உணவை உண்பதும் உயிர்க்கொலையா என்றால் ஒரு வகையில் உண்மைதான். இன்னும் சிலர் இயற்கை உணவு சமைக்காத உணவே சிறந்தது என அதன் பலனைக் கண் கூடாகக் கண்டு உடம்பின் ஆரோக்கியத்திற்கு உகந்ததாக நித்தமும் மூன்று வேளையும் இயற்கை உணவை உன்போரையும் பார்த்துள்ளேன். அதுவும் இரசாயன உரமின்றி, பூச்சி மருந்து தெளிக்கப்படாத முறையில் உண்டாக்கப்பட்ட இயற்கையான காய்கறி, பழங்களே மிகச் சிறந்த உணவாகக் கருதப்பட்டு அதற்கு அதிக விலையும் கொடுத்து வாங்கி உண்போரும் உண்டு. இது போன்ற தருணத்தில் மனிதனுக்கு சிறந்த அல்லது அனைவருக்கும் அனுசரிக்கும் முறை எது என்று நாம் ஆராய்ந்து பார்த்தால் முடிவுக்கு வருவது எளிதில்லை.

இந்த விவாதத்தில் முடிவை நமக்கு அப்பாற்பட்ட சக்தி அல்லது இறைவனிடம் ஒப்படைத்தால் கிடைப்பது மெய்யறிவாகும். இந்த மெய்யறிவு பெற்றவர்களிடம் அவர்கள் கடைபிடிக்கும் உணவு நியமனம் நாமும் கடைபிடித்தால் நாம் உண்ணும் உணவும், பருகும் நீரும் நமக்கு உடலுக்கு புத்துணர்ச்சி தரும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

தாவரங்கள் தங்கள் வாழ்வை முடித்து அல்லது விளைந்தபின் பட்டு கருகும் நிலையில் அதனை உண்பதால் தாவரத்திற்கும் நாம் கேடு விளைவிப்பதில்லை. இந்த கருத்தில்தான் காட்டில் தவம் செய்வோர் காய்ந்த சருகு, இலை, பழங்களை உண்டு வந்ததாக அறிகிறோம். நமக்கு அந்த அளவிற்கு போகமுடியாதலால் விரதங்கள் உண்டாக்கப்பட்டு எந்தெந்த நாளில் எந்த வகையான விரதங்கள் என்ன பலன் என்பதை நம் முன்னோர்கள் அனுபவத்தில் கண்டறிந்து கடைபிடித்து வருகின்றனர். சுமார் 12 ஆண்டுகளுக்கு மேலாக விளைந்த தாவரத்தை உண்ணும்பழக்கமாக கடைபிடித்து வருகிறேன். அதாவது அரிசி, பருப்பு போன்ற விளைந்த வெள்ளாமை இதனை சமைத்து உண்டு வருகிறேன். பொதுவாக காய்கறிகள் விளைந்த வெள்ளாமை அல்ல. ஆனால் உருளைக்கிழங்கு, பீட்ரூட் போன்றன முழுவதும் விளைந்துவிட்டது. இதனை சமைத்து உண்பதால் நாம் தாவரத்தை அழிப்பதில்லை. விளையாத வெள்ளாமையாகக் கருதப்படும் காய்கறிகள் அல்லது மரத்தால் பழுக்காத காய்கள் உண்பதால் அதுவும் உயிர்க் கொலைதான். இதனைக் கருத்தில் கொண்டுதான் ஜைன சமயத்தைச் சார்ந்தோர் பூமிக்கு அடியில் விளையும் பண்டங்களை உண்பதில்லை. உதாரணம் உருளைக்கிழங்கு, வெங்காயம், நிலக்கடலை ஏனெனில் தாவரத்தை வேருடன் பிடுங்கப்படும் சமயம் தாவரம் அழிந்துவிடுகிது என்பது ஜைனர்களின் கருத்தாகும். நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் ஒரு தாவரம் முழுமையாக வளர்ந்து கிழங்கினை உண்டாக்கிவிட்டு அழியும் தருணத்தில் இருப்பதைப்

பார்த்து அதன் பண்டத்தை உண்டால் எந்த பாதிப்பும் இல்லை என்பது உயர்ந்தோரின் முடிவாகும். இதன் அடிப்படையில் உணவு முறை நமக்கு அமைந்துவிட்டால் அப்படிப்பட்ட மனிதனிடம் உயரிய தெய்வநிலை உடனுறையும். இதனை பல ஆண்டுகள் கடைபிடித்த அனுபவத்தையும் பலனையும் அடியேன் கண்டு வருகிறேன். சில நேரங்களில் தவறி விளையாத வெள்ளாமையை உண்டுவிட்டால் நம்மிடமிருந்து உயர் தெய்வத்தன்மை நம்மை விட்டு நீங்கும். அத்தருணத்தில் நமக்கு ஏதாவது ஒரு ரூபத்தில் வரும் சோதனை அல்லது கேட்டினை நாம் உணரலாம். உதாரணமாக விளையாத இளம் நொங்கு அல்லது இளநீர் அருந்துதல் உண்டுவிட்ட பலனை நான் அனுபவரீதியில் பார்த்துள்ளேன்.

வாழ்வில் உயர்ந்த இலட்சியம் வேண்டுவோர்க்கு எந்த உயிருக்கும் கேடு விளைவிக்காத உணவே சிறந்தது என்பதில் ஐயமில்லை. இதைக் கடைபிடிக்க சிரமம் உள்ளவர்கள் படிப்படியாக அசைவத்திலிருந்து சைவத்திற்கு மாறி பின்னர் சாத்வீக சைவத்திற்கு மாறலாம். பாலும், நெய்யும் உணவில் சேர்ப்பதில் எந்த தவறும் இல்லை. எந்த உணவும் அடுத்தவர்க்குப் பகிராதது தானே உண்டு மகிழ வேண்டும் என்ற சுயநலமும் ஏற்பதில்லை. உணவில் மாவுசத்தும், புரதச்சத்தும் நல்ல விகிதத்திலிருந்தால் வளர்ச்சி, ஆரோக்கியம் இருப்பதை தெரிந்து அரிசி சாதத்துடன் பருப்பை சேர்க்கிறோம். வடநாட்டில் சப்பாத்தியுடன் பருப்பை சேர்ப்பர். மருத்துவ குணமளிக்கும் காணப்பயிறு ரசம் சாப்பிட சளிப்பிரச்சனையும், தேங்காய்பால், கருவேப்பிலை வயிற்றுப் புண்ணுக்கும் ஏற்றது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாட்டு மாட்டுப் பாலை காய்ச்சி சாப்பிட சளி, காய்ச்சல் குணமாகும். கரும்பு சாப்பிடுவது ஜீரணத்தைக் கூட்டும். தாகத்தை போக்க எலுமிச்சம்பழ ஜூஸ் என்ற பாரம்பரிய உணவு முறைகள் நமது மரபில் உள்ளது. உணவே மருந்து. மருந்து உடம்பிற்கும் மட்டுமன்று உள்ளத்திற்கும் தான். இதுவே யாருக்கும் எதற்கும் இன்னல் தராத அன்னம். – ஆசிரியர்

## கால்நடை இனங்களைப் பாதுகாத்து பயன்படுத்தல் கருத்தரங்கம்




ஹரியானா மாநிலத்தில், கர்னால் என்ற நகரில் பாரம்பரிய கால்நடை இனங்களைப்பாதுகாத்து பயன்படுத்துதலில் அறிவியலுடன் மக்கள் பங்கேற்பு செயல்பாடு பற்றிய தேசிய கருத்தரங்கம் ஏப்ரல் 8,9, 2026 ல் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அறிவியல் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், தனியார் நிறுவனங்கள் உட்பட 200 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கை இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு. மங்கிலால்ஜாத் துவக்கி வைத்து இந்தியாவில் 2047க்குள் எந்த அங்கீகரிக்கப்படாத இனமும் அங்கீகரிக்கப்படாததாக இருக்கக்கூடாது. அதாவது ஜீரோ அங்கீகரிக்கப்படாத இனம் என்ற இலக்கை எட்ட வேண்டும் எனக் கூறினார். (உதாரணமாக மலைமாடு என மக்கள் கூறும் இனம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இது உடனே அங்கீகரிக்கப்பட வேண்டும்). மக்களுக்கு ஒரு கால்நடை இனம் மூலம் வருமானம் ஈட்டுவதாக இருந்தால்தான் இந்த இனம் நீடித்து காக்கப்படும் நிலை உள்ளது. இந்தியா உலகிலேயே அதிக பால் உற்பத்தி செய்யும் நாடாகவும், முட்டை உற்பத்தியில் 2வது இடத்தையும், இறைச்சி உற்பத்தியில் 4 வது இடத்திலும் உள்ளது. இதற்கு நமது நாட்டு இனங்கள் பாதுகாப்பும், பராமரிப்பும் முக்கியமாகும். மாநில அளவில் செயல்படும் கால்நடை இனப்பெருக்க கொள்கை, கால்நடை வளர்ப்போரின் உரிமைகள், மக்கள் பங்கேற்புடன் கால்நடை இனங்களைப்

பாதுகாத்தல், மேய்ச்சல் நிலங்களை பாதுகாப்பது, உலக மேய்ச்சல் கிடைக்காரர்கள் ஆண்டான 2026 ஐ கொண்டாடுதல் பற்றி விவாதிக்கப்பட்டன. இதில் சேவா நிறுவனத்திலிருந்து திரு. விவேகானந்தன் கால்நடை இனங்களைப் பாதுகாத்தல், மேய்ச்சல் நிலங்கள், கிடைக்காரர்கள் ஆற்றும் சேவையை கட்டுரை மூலம் எடுத்துரைத்தார். கால்நடை வளர்ப்போர் எதிர் கொள்ளும் பிரச்சனைகள், சாவால்களை செயல் வடிவில் கொண்டு வர நல்ல தருனமாக உள்ளது என எடுத்துரைக்கப்பட்டது. மேலும் விவரங்களுக்கு : கே.என். ராஜா, தேசிய கால்நடை இன வள மேம்பாட்டு நிறுவனம், கர்னால். செல்: 9416087785

## கோவில்நிலம் சார்ந்த மேய்ச்சல் நிலங்களை பாதுகாக்க ஒரு பாதயாத்திரை




ராஜஸ்தான் மாநிலம், ஜெய்சல்மீரிலிருந்து ஜெய்ப்பூர் வரை பாதயாத்திரை நடந்த இந்த பாதயாத்திரையின் தூரம் சுமார் 700 கிலோ மீட்டர் ஆகும். இந்த யாத்திரையை திரு. சுமிர்சிங் என்பவர் தலைமை தாங்கி நடத்தினார். 2026 ஜனவரி மாதம் 21ஆம் தேதி அன்று துவங்கி ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி ஜெய்ப்பூர் அடைந்தார். அதாவது 85 நாட்கள் பாத யாத்திரையை செய்தார். இதில் சுமார் 100க்கும் மேற்பட்டோர் – விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர். ராஜஸ்தானில் சுமார் 25,000 இடங்களில் கோவில் காடுகள் உள்ளன.

ஒவ்வொரு கோவில்காட்டிலும் சுமார் 100 லிருந்து 1000 ஏக்கர் வரை மேய்ச்சல் காடுகள் உள்ளன. இதனை மேய்ச்சல் நிலம் என்று வகைப்படுத்தப்படாமல் உள்ளதால் இந்த நிலங்களை தனியார் கம்பெனிகளுக்கு சூரிய ஒளி மின்சாரம் போன்ற திட்டங்களுக்கு தாரை வார்த்து கொடுக்கப்படுகிறது. இதனால் இதை நம்பி வாழும் கால்நடை வளர்ப்போர் மிகவும் அவதிப்படுகின்றனர். பலர் ஒட்டகம் மேய்க்கும் தொழிலை விட்டு விடுகின்றனர். இந்த மேய்ச்சல் நிலங்களை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் பாதயாத்திரை நடத்தப்படுகின்றது. சுமார் 4 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் கோவில் காடுகளாக உள்ளன. இந்த நிலங்கள் அரசின் திட்டங்களுக்கு மாற்றப்படும் அபாயம் உள்ளது. இதில் கலந்து கொண்ட போராட்டக் குழுவினர் 85 நாட்கள் நடந்து ஜெய்ப்பூரை அடைந்தனர். இந்த போராட்டத்தின் விளைவாக சுமார் 3,800 ஹெக்டேர் நிலங்கள் அரசு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இதனால் இந்த போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அரசு தரப்பிலிருந்து கூறியுள்ளனர்.




இதனை ஏற்றுக் கொள்ளாத போராட்டக் குழுவினர் சுமார் 4 லட்சம் ஹெக்டேர் நிலம் முழுவதுமாக அரசு பதிவேட்டில் பதிவு செய்தால்தான் போராட்டத்தை கைவிடுவோம் என்று உறுதியாக உள்ளனர். ஜெய்ப்பூரை அடைந்த தினத்தில் 16.4.2026 அன்று நம் வழி வேளாண்மை ஆசிரியருக்கு போராட்ட குழுவினரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அறப்போராட்டம் வெற்றியடைய வாழ்த்துவோம்.

– ஆசிரியர்

## இயற்கை முறையில் ஏலக்காய் சாகுபடி



பொதுவாக ஏலத்தோட்ட விவசாயிகள் மாதம் ஒரு முறை ஏலக்காய் தோட்டத்திற்கு ரசாயன மருந்து தெளிப்பர். ஆனால் ஏலக்காய்க்கு மூடாக்கு போட்டு விடுவதால் வருடத்தில் 4 முறை மட்டும் பூச்சி மருந்து தெளிப்பதாக பவுலாஸ் என்ற விவசாயி கூறுகிறார். மூடாக்கு போட்டதால் களையெடுக்க வேண்டியதில்லை. உரமும் அதிகம் இடவேண்டியதில்லை. ஆனால் விளைச்சல் அதிகமாகி உள்ளதாகக் கூறுகிறார்.

கேரளாமாநிலம் இடுக்கி மாவட்டத்தில் கஜனாப்பாறை கிராமத்தில் திரு. பவுலாஸ் வசித்து வருகிறார். இவருக்கு தற்போது வயது 56. இவர் 12 ஆம் வகுப்பு வரை படித்து விட்டு 20 வது வயதிலிருந்து எஸ்டேட் விவசாயம் செய்து வருகிறார். தனது தந்தை காலமான பின் விவசாயத்தை முழு பொறுப்புடன் ஏற்று நடத்தி வந்தார். ஆரம்பத்தில் 1.5 ஏக்கரில் இஞ்சி, மிளகுபயிர் சாகுபடி செய்து வந்தார். இதில் வேலை ஆட்கள் மற்றும் செலவு அதிகமானதால் ஏலக்காய் விவசாயத்திற்கு மாறினார். அச்சமயத்தில் 6 ஏக்கர் நிலத்தில் ஏலக்காய் சாகுபடி செய்தார். ஏலக்காயில் நீளமான சரம் கொண்டதும் பெரிய காய்களை உடையதுமான செடிகளை தேர்வு செய்து புது ஏலக்காய் நாற்றுகள் மூலம் விருத்தி செய்தார். ஏலக்காய் சாகுபடியில் மூடாக்கு போட்டு சாகுபடி செலவை கணிசமாகக் குறைத்து விளைச்சலை அதிகப்படுத்தினார். ஏலக்காய் விவசாயத்தின் மூலம் நல்ல லாபம் கிடைத்தது. இதில் வந்த வருமானம் மூலம் சுமார் 25 ஏக்கர் நிலம் சேர்த்து அதிலும் ஏலக்காய் சாகுபடி செய்து வருகிறார். இவருடைய எஸ்டேட் கேரளா மாநிலம் (போடிமெட்டு அருகே) ராஜகுமாரி ஊரில் உள்ளது.

**உழைப்பே உயர்வு**

பவுலாஸ் சலிப்பில்லாமல் உழைக்கும் இளைஞர் ஆவார். இவர் தனது பண்ணையில் வேலை செய்யும் பணியாட்களுடன் இணைந்து பாகுபாடுயில்லாமல் வேலை செய்வார். இவரும் உயரமான மரங்களில் தானே ஏறி கிளைகளை வெட்டுவார்.



வேலை முடிந்தவுடன் பணியாட்களை ஜீப்பில் ஏற்றி தானே ஓட்டி சென்று அவரவர் ஊர்களில் விட்டு விடுவார். இவர் மற்ற எஸ்டேட் உரிமையாளர்களின் பண்ணைகளை பார்வையிடுவார். அவர்கள் கையாளும் நல்ல உத்திகளை தனது பண்ணையில் சிறு பகுதியில் கடைப்பிடித்து பரிச்சித்து பார்ப்பார். இம்முறையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தால் மட்டுமே கடைப்பிடிப்பார். இல்லாத பட்சத்தில் புதிய முறையை கடைப்பிடிக்க மாட்டார்.

**நிலத்தை தயார் செய்தலும் நடவும்**



நடவு நிலத்திலுள்ள செடி கொடிகள், கற்கள், மரத்தின் வேர்கள் போன்றவற்றை அகற்றி, நிழல் தரும் மரங்களை நிலத்திலிருந்து 30 – 40 அடி உயரத்திலுள்ள கிளைகளை வெட்டி சீராக்கி 50 சதவீத சூரியவெளிச்சமும் நல்ல காற்றோட்டமும் கிடைக்க வழி செய்ய வேண்டும். பிற்பகல் நேரத்தில் ஏற்படும் அதிகமான வெப்பத்தைத் தவிர்ப்பதற்கு வடகிழக்குப் பகுதியைவிட தென்மேற்கிலுள்ள பகுதிகளில் அதிகமான நிழல் வேண்டும் என்பதை

மனதில் கொள்ள வேண்டும். ஏப்ரல் மாதத்தில் கோடை மழைக்குப் பிறகு, 2 X 2 X 2 அடி நீள, அகல, ஆழத்தில், குழிக்கு குழி 10அடி இடைவெளி இருக்குமாறு, குழிகள் எடுத்து சூரிய வெளிச்சம் படும்விதத்தில் ஒரு மாதத்திற்கு அப்படியே விட்டு வைக்க வேண்டும். குழிகளில் மண் மற்றும் மக்கிய இலைதழைகளை இட்டு, குழிகளின் நடுவே நிலமட்ட அளவில் ஒரு மண் மேடை அமைத்து, மண் மேட்டின் நடுவில் சிறிய பள்ளம் பறித்து தட்டைகள் அல்லது நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். மேல் மண்ணை நாற்றுகளைச் சுற்றி குவித்தபின் நடப்பட்ட நாற்றுகளில் உள்ள கிழங்குகள் மண்ணிற்குள் நன்றாக இறுக்கமாக இருப்பதற்கு நாற்றுகளைச் சுற்றிலுமுள்ள மண்ணை லேசாக மிதித்து விட்டு நாற்றுகள் காற்றில் அசையாமல் இருக்க ஒரு குச்சியை ஊன்றி தாங்குதலாகக் கட்டிவிட்டு, குழியைச்சுற்றிலும் புதையிட வேண்டும். விவசாயிகள் செடிக்குச் செடி உள்ள இடைவெளி 9 X 9, 10 X 10, 11X11, 12X12 அடி என்ற வேறுபட்ட அளவுகளைப் பின்பற்றுகின்றனர். கர்நாடகத்தில் 6 X 6 அடி இடைவெளிகளில் நடவு செய்கின்றனர். இருப்பினும் 10 X 10 அடி என்பதே கனிசமான விளைச்சலைப் பெறுவதற்கு ஏற்ற இடைவெளியாகும். 10 X 10 அடி இடைவெளியில் ஒரு ஹெக்டேரில் 1100 தட்டைகளை நடவு செய்யலாம்.

**களை எடுத்தல்**

விவசாயத்தில் களை என்பது என்ன? நாம் எதனை பயிராக விவசாயம் செய்துள்ளோமோ அதைத் தவிர நிலத்தில் வேறு எந்தத் தாவரம் நிலத்தில் முளைத்தாலும் அது களையே. ஒவ்வொரு மழைக்காலத்தைத் தொடர்ந்தும் மாறி மாறி பல்வேறுவகையான தாவரங்கள் தானாக முளைக்கக்காணலாம். இவைகளை மண்ணில் இடுவதால் மண்ணிற்கு தேவையான ஊட்டச்சத்துக்களுடன் கிடைக்கின்றன.

நடவு செய்த முதல் வருடத்தில் ஏலத்தோட்டத்தில் களைகள் அதிகமாக முளைக்கும். செடிகளின் அடிபாகம், மற்றுமுள்ள இடைவெளிப்பகுதி புதையிடப்பட்டிருந்தால் களைகள் குறைவாக காணப்படும். களைகள் அதிகமாக இருந்தால் செடிகளைச்சுற்றியுள்ள களைகளை வேருடன் பிடுங்கி, இடைப்பட்ட பகுதிகளிலுள்ள களைகளை வீச்சுகளையாக அகற்றவேண்டும். இது போன்ற செய்முறைகளால் மண்ணில் ஈரப்பதம் நிலைநிறுத்தப்படுவதோடு தோட்டத்தில் மேல்மண் அரிப்பையும் தவிர்க்கலாம். இவ்வாறு கிடைத்த களையை, மூடாக்காக, மண்ணிற்கு ஊட்டம் தரும் அங்கக உரமாகவும் பயன்படுத்தலாம். அடுத்து வரும் வருடங்களில் ஏலச்செடிகள் செழுமையுடன் அடர்ந்து வளர்வதால் உருவாகும் நிழல் காரணமாக களைகள் முளைத்து வளர்வது மிகவும் குறைவாக இருக்கும்.

**மூடாக்கு போடுவது எப்படி?**

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தன்னுடைய நிலத்தில் மழை பொழியும் சமயம் நிலத்தில் நீர் நிற்காமல் வழிந்தோடுவதை கண்டார். ஆனால் நிலத்தில் மரக்கிளைகள் ஒடிந்து குப்பையாக உள்ள பகுதியில் மழை நீர் மற்றும் ஈரப்பதத்தை காக்கும் தன்மை இருப்பதை கண்டறிந்தார். இப்பகுதியில் மண் மிருதுவாகவும் இதை சுற்றி வளர்ந்த ஏலக்காய் செடிகள் நல்ல வளர்ச்சியுடன் பூச்சி நோய் தாக்குதல் குறைந்தும் இருப்பதை உன்னிப்பாக கவனித்தார். இதன்படி நிலத்தில் விழுந்த மரக்கிளைகள், இலைகள், குச்சிகள் போன்றவற்றை அப்புறப்படுத்தாமல் விட்டு விட்டார். இதனால் மழை காலங்களில் நீர் நிலத்திலிருந்து வழிந்தோடுவது குறைந்தது. மண் மிருதுவானது . இலை தழைகள் மக்கி பொல பொலப்பானது. மண்ணின் ஈரத் தன்மை அதிகரித்தது . இந்த முறையை தன்னுடைய 28 ஏக்கர் நிலத்திலும் விஸ்தீரணம் செய்தார். இதன்படி ஏலக்காய் தோட்டத்தில் சுமார் 10 செ.மீ ஆழம் வரை மக்கிய மக்கு உருவானது . பிற விவசாயிகளின் தோட்டத்தில் நிலத்தில் தோன்டினால் மண் தான் காணப்படும். மக்கிய மக்கு வராது. இவருடைய நிலத்தில் ஏலக்காய்வாரிய வல்லுநர்கள் பார்வையிட்ட போது மண்ணில் அங்கக பொருள்கள் 2.6 லிருந்து 4.05 சதமாக உயர்ந்திருந்ததை பார்க்க முடிந்தது. இவரது நிலத்திலுள்ள மண்ணை எடுத்து கையில் பிடித்தால் பந்து போன்று வராமல் உதிர்ந்து காணப்பட்டது. ஆனால் பக்கத்து தோட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் மண்ணை கையில் பிடித்து பந்து போன்று உருண்டையாக செய்து விடலாம் . இந்த பரிசோதனை இவருடய நிலத்தில் அங்கக பொருள்கள் அதிகமான நிலையை காட்டுகிறது. இவருடைய நிலத்தில் அமிலத் தன்மை குறைந்து

காரத்தன்மை கூடியுள்ளது. பிறருடைய நிலத்தில் கார அமிலத் தன்மை 4.3 ஆக உள்ளநிலையில். இவருடைய நிலத்தில் 5.6 ஆக காணப்பட்டது.

ஏலக்காய் பயிரிடப்படும் நிலத்தில் நிழலுக்காக சந்தனம், ஈட்டி, ஓக்ஸ், தேக்கு, பலா போன்ற மரக்கன்றுகளை வளர்ப்பர். மரங்கள் வளர்ந்து வரும் சமயம் கிளைகளை வெட்டி விடுவர். இவர் மரங்களின் உயரத்தை கூட்டியுள்ளார். இதனால் சுமாரான பரவலான நிழல் கிடைக்கும். கிளைகள், கொப்புகளை நீக்கி விடும் சமயம் கிடைக்கும். தாவரக் கழிவுகளை விறகிற்காக பயன்படுத்தாமல் அந்தந்த இடங்களிலிலே நிலத்திலேயே மக்குமாறு விட்டு விடுகிறார். இதனால் உதிர்ந்த இலைகள் மரக்குச்சிகள் அனைத்தும் மழை ஈரத்தால் மக்கி விடுவதாகக் குறிப்பிடுகிறார்.

**மூடாக்கு போடுவதின் பயன்கள்:**

இவருடைய நிலத்தில் சுமார் 1 அடிஅளவுக்கு மேலாக மூடாக்கு / மக்கிய கம்போஸ்ட் காணபடுகிறது. இதில் ஏலக்காய் செடியின் வேர்கள் படர்ந்திருப்பதைக் காணலாம். நிலத்தில் இரசாயன உரம் அதிகளவு இடாமல் இருப்பதால் நிலத்தின் களர் / உவர் தன்மை (PH) குறையாமல் இருக்கும், இதனால் விரைவில் அங்ககக்கழிவுகள் மக்கும். செடிகளும் அழுகாது. செடிகளின் வளர்ச்சி அதிகமாகி இவைகள் அகலமாகவும் அடர்த்தியாகவும் இருப்பதால் சிறிய அளவு மழை பெய்தால் நிலத்தில் நீர் வீணாக விழாது. பெரியமழை பெய்தாலும் நிலத்து நீர் வழிந்தோடாமல் மூடாக்கே தன்னுல் நிறுத்தி வைத்துக் கொள்ளும். இக்காரணங்களால் தண்டு துளைப்பான், சொறிக்காய் (பேன் மூலம் வரும் நோய் ) அறிகுறிகள் மிகவும் குறைவு. மேலும் ஒரு குத்தில் சுமார் 5–6 கிலோ மகசூல் கிடைப்பதாகவும் ஒரு குத்தில் 60 தட்டைகளுக்கு மேலாகவும், செடிகள் 15 அடி உயரத்திற்கும் அதிகமாகவும் காணப்படுகின்றன.

ஏலக்காய் தோட்டத்தில் நிழல் பராமரிப்பில் புதிய முறை பவுலாஸ் தன்னுடைய நிலத்தில் டிசம்பர் – ஜனவரியில் மட்டும் ஒரு முறை தோட்டத்திற்கு நிழல் தரும் மரங்களை வெட்டி நீக்கி விடுகிறார். மழைக்காலம் வரும் முன்னர் இப்படி கவாத்து செய்வதால் ஏலச்செடிகளுக்கு ஏற்படும் சேதாரம் மிகக் குறைவு . பிற விவசாயிகள் மழைக்கால நேரத்தில் ஜூன் – ஜூலை மாதத்தில் இந்த வேலையை கையாளுவர். இதனால் ஏலச் செடிகளுக்கு அதிக சேதம் ஏற்படுவதாகக் கூறுகிறார். ஆனால் இவருடைய ஏலச்செடிகள் மழைக்காலத்தில் கூடுதல் வளர்ச்சியை அடைகிறது. இவர் வளர்ந்த நிழல் தரும் மரங்களின் பக்க கிளைகளை கவாத்து செய்கிறார். இதனால் இவர் தோட்டத்தில் மரங்கள் நேராக அதி உயரமாக வளர்ந்துள்ளது.மேலும் நிலத்தில் அதிக நிழல் படுவதில்லை. பிற விவசாயிகள் பக்க கிளைகளை படர விட்டு மேல் பகுதி கிளைகளை வெட்டி விடுவர். பவுலாஸ் தோட்டத்தில் மண்ணில் நல்ல மூடாக்கு உள்ளதால் குறைந்த நிழலில் ஏலச்செடி நல்ல வளர்ச்சியை கொடுப்பதாகக் குறிப்பிடுகிறார்.

**ஏலச்செடியில் பூச்சிகள்**

ஏலக்காய் தனிப்பயிராக வளர்க்கப்பட்டாலும் வேளாண் சூழ்நிலை அமைப்பில் பசுமை சூழ்ந்த பலதரப்பட்ட மரங்கள், செடி, கொடிகள் மற்றும் பல உயிரினங்களுக்கிடையே வளர்வதால் இது சமச்சீரான, தற்சார்பு கொண்ட சூழலில் (balanced eco system) வளரும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இதன் பொருள் இந்த சூழலில் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கம் குறைவாகவே இருக்கவேண்டும். சிறிய ஏலக்காய் விவசாயத்தில் பூச்சிகளால் பிரச்சனை என்பது 1980ன் துவக்க காலம் வரை மிகக் குறைவான அளவில்தான் இருந்து வந்தது. அதன் பின் தீவிரமான ஏல விவசாயம் என்ற பெயரில் அதிகமான விளைச்சலைத் தரும் ரகங்களின் அறிமுகம், மற்றும் கோடை காலத்தில் அதிகமான நீர்ப்பாசனம், போன்றவை நிழலமைப்பை அதிக அளவில் குறைத்தது, இரசாயன பூச்சி பூஞ்சாண கொல்லிகள் மற்றும் உரங்களை அளவிற்கதிகமாகப் பயன்படுத்தியது போன்ற காரணங்களால் ஏலக்காய் பயிரிடப்படும் விளையும் வேளாண் சூழலில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஏலச்செடியைத் தாக்கும் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகமானது. பூச்சிகளின் தாக்குதல் காரணமாக அதிக அளவில் பயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது. இரசாயன பூச்சி பூஞ்சாண கொல்லிகள் மற்றும் உரங்களை மட்டுமே அதிகமாக நம்பி இருப்பது தற்சார்புடைய எந்த விவசாயத்திற்கும் ஏற்புடையதல்ல. இரசாயன பூச்சி நாசினிகள் தற்காலிகமான உடனடிப் பயன்களைத் தரும். இவற்றை அளவிற்கதிகமாக பயன்படுத்தும்போது எதிர்மறையான பக்க விளைவுகள் ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் பூச்சிகளின் பெருக்கம்

அதிகமாவதுமுண்டு (Pest resurgence). ஏலவிவசாயத்தின் மொத்த செலவில் முதலாவதாக இடம் பெறுவது அறுவடையாகும். இதனை அடுத்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டிற்காக ஆகும் செலவுகளாகும். ஏலச்செடியைத் தாக்கும் பூச்சிகளின் எண்ணிக்கை 63 ற்கும் அதிகம் என்ற தகவல் மலைக்க வைக்கிறது. ஆனால் அதிகமான சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிகள் என்பவை நான்கு மட்டுமே: 1.இலை பேன், காய் / சரம் / தண்டு துளைப்பான்கள், 3.வேர்ப்புழு, 4.வேர் முடிச்சு நூற்புழு.

ஏலக்காய் சாகுபடியாளர்கள் வருடத்திற்கு 5–7 முறை இரசாயன உரம் இடுவர். அனால் இவர் ஒரே ஒரு முறை மட்டும் எலும்பு தூள் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு கலந்து செடிக்கு 500 கிராம் இடுகிறார். மேலும் சாணிப்பால் தயார் செய்து ஏலச்செடிகளுக்கு பயன்படுத்தி பார்த்ததில் நோய் தாக்குதலுக்கு உட்பட்டதால் இம்முறையை கைவிட்டு விட்டார். நிலத்திற்கு மூடாக்கு போடுவதோடு விட்டு விட்டார். இதுவே போதுமானது என்று கூறுகிறார். இவர் தன்னுடைய ஏலச்செடிகளுக்கு மயில் துத்தம், பெவிஸ்டின் போன்ற பூஞ்சாளக் கிருமி நாசினிகளை உபயோகப்படுத்துவது இல்லை. ஏலக்காய் தண்டு துளைப்பான், சொறி நோய்க்கு பிற விவசாயிகள் 12–14 முறை பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பர். ஆனால் பவுலாஸ் அதிகப்படியாக 2–4 முறை மட்டும் தெளித்து செலவை குறைக்கிறார். இவருடைய ஏலக்காய் தோட்டத்தில் குறைந்த அளவு இரசாயன மருந்துகள் உபயோகப்படுத்தப் படுவதால் தீமை தரும் பூச்சிகளை உண்ணும் இயற்கை நன்மை செய்யும் நல்ல பூச்சிகள் 47 சதமாக உயர்ந்து உள்ளது. பிற விவசாயிகளின் தோட்டங்களில் நன்மை செய்யும் பூச்சிகள் 2 சதவீதமாக உள்ளது என்று இந்திய ஏலக்காய்வாரிய வல்லுநர் அறிக்கை கூறுகிறது.

நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு கொண்ட புதிய ஏலக்காய் ரகத்தை உருவாக்குதல்:

முன்னர் பவுலாஸின் தந்தை நல்லாணி என்ற ஏலக்காய் ரகத்தை தனது தோட்டத்தில் நட்டு இருந்தார். இந்த ரகத்தில் நல்ல வளர்ச்சியும் பூ சரங்கள் அதிகம் கொண்டதும் பெரிய காய்கள் கொண்டதுமான செடிகளை தேர்வு செய்து அதிலிருந்து புதிய நாற்றுக்களை உருவாக்கி தோட்டத்தில் விஸ்தீரணம் செய்துள்ளார். இந்த ரகத்தில் சொறிக்காய் வருவதில்லை. 15 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அதிக வளர்ச்சியை கொடுத்து வருகிறது. நல்லாணி, ஐ.சி.ஆர்.ஐ–5 போன்ற ஏல இரகங்களை காட்டிலும் செடிகளின் உயரம் , இலையின் அகலம் , சிம்புகள் , பூ சரங்கள், காய்களின் எண்ணிக்கை போன்றவை அதிகமாக காணப்படுகின்றன. ஒரு கிலோ எடையில் 600–650 காய்கள் இருக்கும். நல்லாணியில் 900–1000 காய்களும் ஐ.சி.ஆர்.ஐ–5 ல் 1000–1500 காய்கள் இருக்கும். அதாவது காய்களின் எடை கூடுதலாக இருக்கும். ஒரு செடிக்கு 140 சரங்கள் காணப்படும் . ஒரு சரத்திற்கு 100 பச்சை காய்களும் ஒரு செடிக்கு 1400 காய்களும் கிடைக்கும். ஒரு செடிக்கு 3.4 கிலோ காய்கள் எடையும் ஒரு ஹெக்டேருக்கு 3500 கிலோ (1000 செடிகள் கொண்ட நிலம்) வும் கிடைக்கும்.

பண்ணையை மேற்பார்வையாளர்கள் (Supervisor) இல்லாமல் பராமரித்தல்: இவர் தனது 40 ஏக்கர் எஸ்டேட் (28 ஏக்கர் சொந்த நிலம் + 12 ஏக்கர் உறவினர் நிலம்) பண்ணையை மேற்பார்வையாளர்கள் இல்லாமல் தானே நிர்வாகம் செய்கிறார். பிற பண்ணைகளில் இதே விஸ்தீரண ஏலக்காய் பண்ணையை பராமரிக்க 3–4 மேலாளர்கள் தேவைப்படுவர் . இதனால் நிர்வாக செலவு முற்றிலும் குறைந்து விடுகிறது.

**தேனீ கூடுகளை கலைக்காமல் விட்டு விடுதல்**

இவருடைய எஸ்டேட்டில் நிழல் தரும் மரக்கிளைகளிலும், மண் புற்றுகளிலும் இயற்கையாக தேனீக்கள் கூடு கட்டுகின்றன. இதனை வேலையாட்கள் கலைத்து விடாமல் பாதுகாக்கிறார். இதனால் தேனீக்களின் மகரந்த சேர்க்கை மூலம் நல்ல ஏல விளைச்சல் கிடைப்பதாக நம்புகிறார். பிற எஸ்டேட்டில் தேன் பெட்டிகள் செயற்கையாக வைக்கப்பட்டு மகரந்தச் சேர்க்கை நடைபெற ஊக்கு விக்கப்படுகிறது.

**குறைந்த செலவில் நிறைந்த வருமானம்**

இவருடைய நிலத்தில் களை எடுக்க ஆள் தேவையில்லை. அதே போல் மிக குறைந்த அளவு இரசாயன இடு பொருள்களை உபயோகப்படுத்துவதால் மொத்தத்தில் செலவு மிக குறைந்த ளவே ஆகிறது. உதாரணமாக களை எடுக்க 90 ஆட்கள் பிற தோட்டங்களில் பயன்படுத்துவர்; ஆனால் இவர் 3 ஆட்கள் உதவியுடன் களை எடுத்து விடுகிறார். இவருடைய தோட்டத்தில் மகசூல் கூடுவதால் 200 பெண்கள் அறுவடை செய்ய தேவைப்படுவர். பிற

தோட்டத்தில் குறைந்த அளவு மகசூலை அறுவடை செய்ய 100 பெண்களே செய்து விடுவர். இவர் ஏக்கருக்கு 1600–2000 கிலோ காய்ந்த காய்கள் எடுக்கிறார். இவருடைய சாகுபடி செலவு ரூ. 15500 மட்டும் தான் (பிற தோட்டங்களில் ஏக்கருக்கு ரூ. 1 . 5 லட்சம் வரை செலவாகிறது). இவருடைய காய்களுக்கு கூடுதல் விலை ரூ.40 வரை சேர்த்து கிடைக்கிறது. ஒரு கிலோவுக்கு சராசரியாக ரூ. 700 விலை கிடைத்தாலும் செலவு போக நிகர லாபம் மற்ற விவசாயிகளைக் காட்டிலும் பல லட்சம் கூடுதலாகும். இவருடைய பண்ணையை கடந்த 6 வருடங்களில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பார்வையிட்டு சென்றுள்ளனர். ஆனால் இந்த அளவு மூடாக்கு முறையை உண்டாக்க குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆகும் என்று கூறி சென்றுள்ளனர். இவர் 1995, 2011 ம் ஆண்டுகளில் ஏலக்காய் தோட்டத்தில் சிறந்த விளைச்சலுக்காக ஏலக்காய் வாரியத்தின் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளார்.

Mr. K.V.Paulose,
Kochinira vathu house
Rajkumari, Gajanapara post,
Iduki district – 6865619
Ph: 04868 243355. Cell: 09447 786026
தொகுப்பு : டாக்டர். வரதராஜன், சேவா
இயக்குநர் (ஆராய்ச்சி) – ஓய்வு,
இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிறுவனம், மயிலாடும் பாறா
கேரளா

## இயற்கை முறையில் முந்திரி சாகுபடி

பட்டம் : தை மாதம் ,


கார்த்திகை மாதம் : ஒவ்வொரு மரத்திற்கும் சாணிஎரு 4–5 தட்டு கூடை வைக்க வேண்டும்.

மார்கழி மாதம் : பஞ்சகவ்யம் தெளிக்க வேண்டும்.

பூ எடுத்து பிஞ்சு வைக்கின்ற பக்குவத்தில் பூச்சி விரட்டி முழுமையாக அடிக்க வேண்டும். அடுத்த 10 நாள் இடைவெளியில் பஞ்சகவ்யம் மற்றும் பூச்சி விரட்டி சமவிகித அளவில் கலந்து அடிக்க வேண்டும். இது போல் தொடர்ந்து 3 முறை செய்ய வேண்டும்.

கே.எம். செல்லமுத்து,
கருக்கம்பாளையம், ஊஞ்சலூர் அஞ்சல்,
ஈரோடு மாவட்டம்.
செல் : 9486602389

## பெத்தயனின் கால்நடை வைத்யம்



விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம் காக்கிவாடன்பட்டி கிராமத்தில் வசித்து வரும் பெத்தயன் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக ஆடு மேய்க்கும் தொழிலை செய்து வருகிறார். இவர் 250 செம்மறி ஆடு, 50 வெள்ளாடு மற்றும் மாடுகள் வைத்து பராமரித்து வருகிறார். கால்நடைகளுக்கு காலநிலைக்கு தகுந்தவாறு தடுப்பூசி போடப்படும். மேற்கொண்டு கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு பல வைத்தியங்கள் செய்து வருகிறார்.

**வாய்க்காணைக்கு**

வேப்பண்ணெயுடன் மஞ்சள்தூள் கலந்து உப்புக்கால் பொடி செய்து ஒன்றாக சேர்த்து குழப்பி வாயில் 5 நாள் தடவி வர வாய்காணை குணமாகும்.

**நாய்கடிக்கு**

கால்நடைகளை நாய் கடித்துவிட்டால் கடித்த இடத்தை சுத்தம் செய்து உடனே கடிவாயில் எருக்கம்பால் வைக்க வேண்டும். இதனால் நாய் கடியின் விஷம் ஏறாமல் இருக்கும். இதனை 1 வாரம் செய்து வர வேண்டும்.

**மாடு முட்டினால்**

மஞ்சநத்தி இலை, உப்புக்கல், சின்ன வெங்காயம், மஞ்சள் இவை அனைத்தையும் இடித்து சாராக பிழிந்து உள்ளே ஊற்ற வேண்டும். மனித யூரினை 100 மி.லி பிடித்து உள்ளே ஊற்றினாலும் குணமாகும்.

100 மி.லி. நல்லெண்ணெயுடன் மஞ்சள் 1 தேக்கரண்டி, மிளகு பொடி 1 தேக்கரண்டி உள்ளே கலந்து உள்ளே ஊற்ற வேண்டும்.

**நஞ்சுக்கொடி விழுக**

எள் இலை சாறு எடுத்து 200 மி.லி உள்ளே கொடுக்க வேண்டும். பிரண்டையை கட்டி விடலாம்.

பெத்தையன், காக்கிவாடன்பட்டி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம், – தொகுப்பு : சங்கீதா, சேவா

## ஆடுகளின் மூலிகை வைத்ய செயலியில் வரும் வைத்ய முறைகள்

(சென்ற இதழில் பக்கம் : 7ல் வெளியிடப்பட்ட வைத்ய முறைகளின் தொடர்ச்சி)

**16. புண்கள்**

அறிகுறிகள்:

வாய், கால் குளம்பு மற்றும் உடலின் பிற பகுதிகளிலும் கொப்பளங்கள் காணப்படும். சரியாக இரை எடுக்காது. புண்களில் புழுக்கள் காணப்படும்.

வைத்தியம் :

புண்களுக்கு மூலிகைத் தைலத்தை கீழ்க்கண்ட முறையில் தயார் செய்து புண் பகுதிக்கு மேல் பூச வேண்டும். வைத்தியம் செய்யும் முன் ஒரு லிட்டர் நீரில் 10 கிராம் சீனாகாரம் கலந்து புண்களை கழுவி விடவேண்டும்.

மூலிகை தைலம் செய்முறை: தேங்காய் எண்ணெய் 250 மி.லியுடன் ஊமத்தை இலைகளை பிழிந்த சாறு 250 மி.லி ஒன்று சேர்த்து இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் நன்றாக கொதிக்க வைக்கவும். ஒரு மணி நேரம் கொதிக்க வைக்கும் போது எண்ணெய் பதத்தில் திரவம் கிடைக்கும். பின்னர் அடுப்பை அணைத்து விட்டு மயில் துத்தம் 3 கிராம் அளவு சேர்த்து நன்கு கரையும் வரை கலக்கவும். இந்த மூலிகைத் தைலத்தை ஒரு கண்ணாடி பாட்டிலில் சேமித்து எல்லா வித புண் பாதிப்புகளுக்கும் புழு வைத்த புண்களுக்கும் பூசி வரலாம்.

வாய்ப்புண்ணிற்கு பன்றிக் கொழுப்பு 100 மி.லியுடன் கஸ்தூரி மஞ்சள் 10 கிராம் கலந்து பூச வேண்டும். அல்லது வெள்ளைபூண்டு, மஞ்சள் அரைத்து பூச வேண்டும்.

**17. ஆட்டுக்குட்டிகளின் கழிச்சல் நோய்**

அறிகுறிகள் : துர்நாற்றத்துடன் கூடிய கழிச்சல் தெரியும்; காய்ச்சல் இருக்கும்; சோர்வுடன் செயலற்று நின்று கொண்டிருக்கும்; பார்வை இயல்பாக இல்லாமல் கண்கள் நோய் அறிகுறியுடன் தெரியும். உஷ்ணமானி கொண்டு சோதித்தால் 104 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணநிலையில் காய்ச்சல் இருக்கும்.

காரணம் : பாக்டீரியா நுண் கிருமி தாக்குவதால் கன்று கழிச்சல் நோய் ஏற்படும்.

வைத்தியம் : கொய்யா கொழுந்து இலை 100 கிராம், சுக்கு 10 கிராம் சேர்த்து இடித்து உருண்டை பிடித்து ஒரு நாளைக்கு ஒரு முறை இரண்டு நாட்கள் வாய் வழியாக உள்ளே புகட்ட வேண்டும். அல்லது திரிபலாசூரணம் (கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் சேர்ந்தது) பொடி 5 கிராம், ஆவாரம் தூள் 5 கிராம் சேர்த்து ஒரு நாளைக்கு இரண்டு முறை வாய்வழியாக கொடுக்க வேண்டும்.

**18. ஆடுகளின் ஆரோக்கியத்திற்கு பயன்படும் பஞ்சகவ்யா**

பஞ்சகவ்யாவை கால்நடைகளுக்கு கொடுத்து வந்தால் ஆடுகளுக்கு சினை தங்காமை, மீண்டும் மீண்டும் சினைப்படுத்தியும் கரு தங்காமை போன்ற பாதிப்புகள் ஏற்படாது.

செய்முறை : பசுவிலிருந்து கிடைக்கும் 5 பொருட்கள் (சாணம், சிறுநீர், பால், தயிர், நெய்) கொண்டு தயாரிக்கப்படுகிறது.

பசுவின் சாணம் – 1 கிலோ, பசுவின் கோமியம் – 1 லிட்டர், பசுவின் பால் – 1 லிட்டர், பசுவின் தயிர் – 1 லிட்டர், பசு நெய் – 100 கிராம் மேற்கூறிய 5 பொருட்களுடன் 2 வாழைப்பழம், வெல்லம் 500 கிராம் ஆகியவற்றை சேர்த்து ஒரு பிளாஸ்டிக் வாளியில் கலக்கி விடவும். மேற்கூறிய கலவை நன்றாக நொதித்துப்போகும் அளவுக்கு ஒரு வாரம் வரை வைத்திருக்கவும் (பிளாஸ்டிக் வாளியினை துணியால் மூடி வைக்க வேண்டும்).

வைத்திய செய்முறை : செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு மாதம் ஒரு முறை 100 மி.லி அளவு பஞ்சகவ்யா வாய் வழியே கொடுக்கலாம்.

செல்லமுத்து, கருக்கம்பாளையம், ஊஞ்சலூர் வழி ஈரோடு மாவட்டம். செல் : 9486602389

**19. பால் காய்ச்சல் அல்லது கால்சியம் குறைபாடு:**

பொதுவாக கன்றுகுட்டி ஈன்ற 48 மணி நேரத்திற்குள் இரத்த–கால்சியம் அளவு குறைவதால் ஏற்படும் பால் விலங்குகளில் இந்த நோய் பொதுவாக ஏற்படுகிறது.

வைத்தியம்: அரை கிலோ சுண்ணாம்புக் கல்லை (கால்சியம் ஹைட்ராக்சைடு) எடுத்து ஒரு மண் பானையில் வைக்கவும். 10 லிட்டர் தண்ணீர் சேர்த்து இரவு முழுவதும் வைக்கவும். 250 மில்லி சூப்பர் நேட்டன்த் தண்ணீரை (மேல் நீர் அடுக்கு) எடுத்து, விலங்கு குடிநீரில் கலந்து கால்நடைகளுக்கு தினமும் உணவளிக்கவும். மேல் அடுக்கு நீரை எடுத்துக் கொள்ளும் போது, தினமும் 250 மில்லி அளவுள்ள புதிய நீரை சம அளவில் சேர்க்கவும். ஒவ்வொரு 20 நாட்களுக்கும் முழு உள்ளடக்கத்தையும் புதிய சுண்ணாம்பு மற்றும் தண்ணீருடன் மாற்றவும்.

– எம். ஆறுமுகன், தர்மபுரி.

அல்லது

நாட்டுக்கோழி முட்டை – 1, முருங்கை இலை – 2 கைப்பிடி அளவு, பிரண்டை –1 கைப்பிடி அளவு, வெல்லம் – ஒரு துண்டு (20 கிராம்). முருங்கை இலை மற்றும் பிரண்டை இரண்டையும் தனித்தனியாக அரைத்து, வெல்லத்தை சேர்த்து இரண்டையும் குழைத்துக் கொள்ள வேண்டும். இக்கலவையை ஒரு நாளிற்கு ஒரு முறை வீதம் மூன்று நாட்கள் கொடுக்க வேண்டும். இந்த நடைமுறையை தொடர்ந்து பின்பற்றலாம் மற்றும் இது கால்சியம் குறைபாட்டால் ஏற்படும் நோய்களைத் தடுக்கிறது.

**20. எலும்பு முறிவு**

காரணங்கள்: கீழே விழுவதால், விபத்தினாலும் எலும்பு முறிவு ஏற்படும்.

வைத்தியம் : உளுந்து 50 கிராம் தூள் செய்து சலித்து ஒரு கோழி முட்டை வெள்ளைக்கரு சேர்த்து பசையாக்கி ஒரு நீண்ட வெள்ளைத் துணியில் பசையை தடவி வைக்கவேண்டும். பின்பு எலும்பு முறிவு ஏற்பட்டதை சரியாகப் பொருத்தி வைத்து உளுந்தம் பசை தடவப்பட்ட துணியால் சுற்ற வேண்டும். அதன் மேல் மூங்கில் தப்பைகளை நான்கு பக்கங்களிலும் வைத்து அதற்கு மேல் பசை தடவிய துணியால் சுற்றி கட்டி விடவேண்டும். மூன்று தினங்களுக்கு ஒருமுறை கட்டை கழற்றிவிட்டுப் பின்பு புதுக்கட்டுப் போட வேண்டும். மூன்று கட்டுப் போட்டுவிட்டு நான்காவது கட்டு 15 அல்லது 20 நாள் வரை கட்டை அவிழ்க்காமல் விட்டுவிட வேண்டும். 20 நாட்களில் முறிந்த எலும்பு நன்றாகக் கூடிவிடும். பின்பு கட்டை அவிழ்த்து விடலாம். பின்பு சில நாட்களுக்கு கட்டு இருந்த பகுதியில் தேங்காய் எண்ணெய் விட வேண்டும்.

–சின்னண்ணன், பேடரள்ளி. தர்மபுரி.

**21. பால் குறைந்து கறந்தால்**

அறிகுறிகள்: பால் அளவு குறைந்து இருக்கும்,

பால் குறைய காரணங்கள் : வளர்ச்சி குறைவு, பால் மடி இறுக்கம், போதிய அளவு அடர்தீவனம் இல்லாதிருப்பது, உடலில் தாது உப்புகள், வைட்டமின் குறைவு, மாசி விழாமல் அடிதள்ளுதல், சுண்ணாம்பு சத்து குறைவு, காணை நோயால் பாதிப்படைதல், செரிமான நோய்களால் பாதிப்படைதல், போன்றவற்றால் பால் குறைகிறது.

வைத்தியம்: பால் அதிகம் கறக்க சுரைக்காய் 1/4 கிலோவுடன் வெந்தயம் 50 கிராம், தேங்காய் ஒரு முடி துருவல், ஊற வைத்த உளுந்தம் பருப்பு 100 கிராம், பனை வெல்லம் 100 கிராம் ஆகியவற்றை நன்கு அரைத்து தினம் ஒரு வேளை வீதம் 5 நாட்களுக்கு கொடுத்து வந்தால் பாலின் அளவு அதிகரிக்கும்.

– எஸ். முனியாண்டி, தேவாரப்பன்பட்டி, திண்டுக்கல்.

**22. கொம்பு முறிவு**

காரணங்கள்:

அடுத்த ஆடுகளுடன் முட்டிக் கொள்ளுதல், விபத்துக்கள், தலைப்புற்று, மண்டைக்கரப்பான் போன்ற காரணங்களால் உண்டாகலாம்.

வைத்தியம்:

ஒடிந்த கொம்பை நேராக நிறுத்தி மற்ற கொம்புடன் மூங்கில் குச்சி வைத்து கட்ட வேண்டும். பனங்கருப்பட்டி பாலில் தலைமுடி சேர்த்து ஒடிந்த பகுதியைச் சுற்றி பூச வேண்டும். அல்லது புளியங்கொட்டை 20 எடுத்து அரைத்து நீரில் கொதிக்க வைத்து கிடைக்கும் பசையை கொம்பின் மேல் தட வேண்டும்.

–அப்துல் ரசாக், மதுரை.

**23. படுத்த ஆடு எழுந்து நடக்க**

அறிகுறிகள்: படுத்த ஆடு எழுந்து நிற்க முடியாது. இது சத்து பற்றாக்குறைவினால் உண்டாகிறது.

தேவையான பொருட்கள்: தழுதாழை, முடக்கத்தான், வாதநாராயணன், மஞ்சள் கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, நொச்சி, வேலிப்பருத்தி, குப்பைமேனி, சோற்றுக் கற்றாழை, பூண்டு, சின்ன வெங்காயம் ஒவ்வொன்றும் 25 கிராம் எடுத்து அரைக்க வேண்டும். தனியாக கருஞ்சீரகம், சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், பெருங்காயம், ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து அரைக்க வேண்டும். அனைத்தையும் சேர்த்து கருப்பட்டியுடன் கலந்து உருண்டை பிடித்து (50 கிராம்) உள்ளுக்குள் கொடுக்க வேண்டும். இதனை 3 நாட்கள் கொடுத்து வர வேண்டும். வெளிப்பூச்சாக வேப்ப எண்ணெய் 1/4 லிட்டர் சூடுபடுத்தி நொச்சி, எருக்கம் பூ இடித்து துணியில் கட்டி உடம்பு முழுவதும் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

**24. அம்மை / மருகு / வெடிப்பு**

நோய் அறிகுறி:

ஆட்டின் உடல் முழுவதும் கொப்புளங்கள் காணப்படும். காய்ச்சல் இருக்கும். முகம் மற்றும் பால்மடிப் பகுதிகளில் கொப்புளங்கள் அதிகமாகக் காணப்படும்.

தேவையான பொருட்கள்:
பூண்டு 3 பல், மஞ்சள் பொடி 5 கிராம், சீரகம் 10 கிராம், திருநீற்றுப்பச்சிலை கைப்பிடியளவு, வேப்பிலை கைப்பிடியளவு, வெண்ணெய் அல்லது நெய் 25 கிராம்.
மருந்து தயாரிப்பு:
சீரகத்தை மட்டும் சுமார் 15 நிமிடங்கள் நீரில் ஊறவைத்த பின் நன்கு அரைக்கவும். அரைத்த பின் இதோடு வெண்ணெய் அல்லது நெய் சேர்த்து கலக்க வேண்டும்.

**சிகிச்சை முறை**

முதலில் பாதிக்கப்பட்ட மேற்பகுதியை நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின் உலர்ந்த பிறகு பாதிக்கப்பட்ட பகுதி மேல் அதாவது ஆடுகளின் மேல் காணப்படும் கொப்புளங்கள் மேல் நன்கு பூசவும்.

– பால்சாமி. வேம்பூர். தூத்துக்குடி மாவட்டம்.

## 25. மூட்டு வீக்கம்

நோய் அறிகுறி:
ஆடுகள் எழுந்திருக்க முடியாது. நிற்க முடியாது. முழங்கால், மூட்டுப் பகுதி வலி மற்றும் மிருதுவாகும் தன்மை உண்டாகும்.
நோய்க்காரணம்:
மூட்டுப்பகுதியில் நீர் கோர்த்தல் மற்றும் முழங்கால், மூட்டுப்பகுதியில் ஏற்பட்ட வீக்கம்.
தேவையான பொருட்கள்:
சோற்றுக்கற்றாழை மடல் 50 கிராம், சுண்ணாம்பு 5 கிராம் (கால்சியம் ஹைட்ராக்சைடு), பிரண்டைக் கொடி (தண்டுப்பகுதி) 50 கிராம், மஞ்சள் தூள் 10 கிராம், பூண்டு 3 பற்கள், நல்லெண்ணெய் 50 மி.லி.
மருந்து தயாரிப்பு:
குறிப்பிடப்பட்ட அனைத்துப்பொருட்களையும் ஒன்றாக சேர்த்து கூழ் போல அரைத்துக் கொள்ளவும். அரைத்த பின் இவற்றை ஒரு லிட்டர் நல்லெண்ணெயில் சேர்த்து இந்த கலவையை அடுப்பிலேற்றி சூடாக்கவும். கொதித்த பின்பு இறக்கி ஆற வைக்கவும்.
சிகிச்சை முறை:
இந்தக்கலவையை பாதிப்பு ஏற்பட்ட ஆடுகளின் மூட்டு மற்றும் முழங்கால் பகுதியில் அழுத்தமின்றி மெதுவாகப் பூசவும். பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் ஒரு நாள் இரண்டு முறை சுடுநீரால் ஒத்தடம் கொடுக்கவும்.

## 26. பூச்சிக்கொல்லி நச்சுத்தன்மை /சயனைடு நச்சு/ காளான் நச்சேற்றம்:

அறிகுறிகள்:
நீண்ட மூச்சு மற்றும் ஆழ்ந்த பெருமூச்சு, கண்கள் விரிந்த நிலையில் காணப்படும். வாயில் நுரை தள்ளும்.
தேவையான பொருட்கள்:
1) வெற்றிலை 5, மிளகு 5 கிராம், உப்பு 5 கிராம், வெல்லம் 25 கிராம்.
2) புளி 1/2 கிலோ, தண்ணீர் 500 மி.லி. முருங்கை இலைச்சாறு 250 மி.லி. வெல்லம் 50 கிராம்.
மருந்து தயாரிப்பு:
1) முதலில் வெற்றிலை, மிளகு, உப்பு மூன்றையும் ஒன்றாக சேர்த்தரைத்து, வெல்லம் சேர்த்து தனியாக வைத்துக் கொள்ளவும்.
2) புளியை நீரில் ஊற வைத்து, ஊறவைத்த நீரை எடுத்து, இதோடு முருங்கை இலைச்சாறை சேர்த்து, 1/2 லிட்டர் தண்ணீர் சேர்த்து கலந்து கொள்ளவும்.
சிகிச்சை முறை:
முதலில் வெற்றிலைக் கலவையை ஆடுகளுக்குத் தர வேண்டும். அதன் பின் புளிக்கரைசலை 50 மி.லி. வீதம் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை கொடுக்க வேண்டும். அதன் பின் இந்த நேரத்திற்கு இடைவெளியில் மீண்டும் வெற்றிலைக் கலவையை கொடுக்க வேண்டும். இப்படி இரண்டு கலவை மருந்துகளையும் 2 முறை வீதம் கொடுக்க வேண்டும்.
பொன்னுசாமி, ஓடைப்பட்டி, திண்டுக்கல்.

## 27. சிறுநீர் பிரியாதிருத்தல்,

சிறுநீரில் ரத்தம் கலந்து வருதல்
அறிகுறிகள்: ஆடுகள் சிறுநீர் கழிப்பதில் சிரமப்படும். சிறிது சிறிதாக கழிக்கும். பற்களை கடித்துக் கொண்டே இருக்கும், மேலும் ஆடுகள் கூனிக்கொண்டு காணப்படும். சிறுநீர் முழுவதுமாக வெளிப்படாது.
தேவையான பொருட்கள்: முருங்கை இலை 1/2 கிலோ, சோற்றுக்கற்றாழை மடல் ஒன்று, மஞ்சள் 25 கிராம், கீழாநெல்லி 100 கிராம், வில்வ இலை, பழைய புளி, சிறிய வெங்காயம் இம்மூன்றும் வகைக்கு 100 கிராம், நல்லெண்ணெய் 50 மி.லி. நெருஞ்சிச் செடி 50 கிராம், கண்ணுப்பிள்ளை செடி என்ற கூரைப்பூ 25 கிராம், மிளகு 25 கிராம்.

மருந்து தயாரிப்பு மற்றும் சிகிச்சை முறை:
நான்கு மூலிகை மருத்துவ முறைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

1) முருங்கை இலையை நீர் விட்டு ஆடுகளுக்கு அரைத்து கொடுக்க சிறுநீர் தடை இன்றி பிரியும்.

2)சோற்றுக்கற்றாழை, மஞ்சள், கீழாநெல்லி மூன்றையும் அரைத்துக் கொடுக்கவும்.

3) வில்வ இலை, புளி, சிறிய வெங்காயம் மூன்றையும் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து, இதோடு 1/2 லிட்டர் நீராகாரம் கடைந்து கொடுக்க சிறுநீரில் ரத்தம் கலந்து வருதல் நிற்கும்.

4) நெருஞ்சி, கூரைப்பூ, மிளகு மூன்றையும் அரைத்து 1/4 லிட்டர் நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

–ஜேக்கப். நாசரேத். தூத்துக்குடி.

## 28. தோல் நோய்

அறிகுறிகள்: ஆடுகளின் மேல் பகுதியில் அங்கங்கே ரோமம் உதிர்ந்திருக்கும். மேலும் தோல் பகுதியில் சிறு சிறு பந்து போல காணப்படும்.

சிகிச்சை முறை:

1) கைப்பிடி அளவு சீமை அகத்தி இலையை எடுத்து நன்கு அரைக்கும் போது ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து சாறு பிழிந்து, சாறை இதோடு எடுத்துக் கொள்ளவும். நன்கு அரைத்த பின் ஆடுகளின் மேல் தோல் பகுதியில் வெளிப்பூச்சாக பூசிவிட வேண்டும். பாதிப்பு குணமாகும் வரை செய்து வரலாம்.

2)கொல்லங்கோவைக்கிழங்கு மற்றும் சிறிய வெங்காயம் இரண்டையும் 100 கிராம் வீதம் எடுத்து, ¼ லிட்டர் தண்ணீரில் கலந்து, கொதிக்க வைத்து, ஆறிய பின் ஆடுகளுக்கு உள்ளே கொடுக்கவும்.

3) கைப்பிடி அளவு விழுதி இலை, சிறிய வெங்காயம் 50 கிராம் மற்றும் 10 கிராம் சீரகம் எடுத்து மூன்றையும் சேர்த்து நன்கு அரைத்து மூன்று வேளை உள்ளுக்குள் தர வேண்டும்.

–ஆறுமுகம், எழுவணி, காரியாபட்டி,
விருதுநகர் மாவட்டம்.

## 29. வெறி நாய்க்கடி

அறிகுறிகள்:

வெறிநாய் கடித்ததன் காரணமாக ஆடுகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும். மற்றும் ஈக்களை துரத்தும். கன்றுக்குட்டியை கடிக்கும். வாயில் உமிழ்நீர் வடிந்து கொண்டே இருக்கும். கண்ணாடியை காட்டினால் பாய வரும்.

தேவையான பொருட்கள்: ஈஸ்வர மூலிகை வேர், அழிஞ்சில் மரப்பட்டை, பீமரப் பட்டை மூன்றும் தலா 10 கிராம் வீதம், மணத்தக்காளி கைப்பிடியளவு, பேய்மிரட்டி இலை கைப்பிடியளவு, நாயுருவி இலை சிறிது சுண்ணாம்பு, வேப்பெண்ணெய் 25 மி.லி.

சிகிச்சை முறை:

1) உரிக்கட்டி வேர் என்ற ஈஸ்வர மூலிகை வேர், அழிஞ்சில் மரப்பட்டை, பீமரப்பட்டை மூன்றையும் சேர்த்து அரைத்து, ஒரு கப் ஆட்டுப்பாலில் கலந்து ஆட்டிற்கு உள்ளே கொடுக்க வேண்டும்.

–எம். சுப்பிரமணியம், சின்னேரிபாளையம்,
பொள்ளாச்சி, கோவை.

2) மணத்தக்காளி இலைகளை வேப்பெண்ணையில் வதக்கி கடிவாயில் வைத்து கட்ட வேண்டும். இத்துடன் பேய்மிரட்டி இலையை இடித்து இரண்டு கப் சுடுநீரில் கலக்கி உள்ள கொடுக்க வேண்டும். இதை ஏழு நாட்கள் தொடர்ந்து உள்ளே கொடுத்தல் வேண்டும். –ஆறுமுகம், சிறுமம்பட்டி, கரூர்.

3) கைப்பிடி அளவு நாயுருவி இலைகளை எடுத்து நன்கு அரைத்து, இரண்டு கப் வெள்ளாட்டுப் பாலில் கலந்து தினசரி மாலை ஒரு வேளை வீதம் ஏழு நாட்களுக்கு இதே போல், இதே அளவில் உள்ளுக்கு கொடுத்து வர வேண்டும்.

4) கைப்பிடியளவு நாயுருவி இலைகளை எடுத்து அரைத்து சாறு எடுத்து, இச்சாறை சுண்ணாம்புடன் குழைத்து, ஆட்டிற்கு நாய் கடித்த இடத்தில் பூசி வரவேண்டும்.

–பாலன், கடலூர்.

## 30. அரணைக்கடி

அறிகுறிகள்: ஆடுகளின் வால் பகுதி தடித்துக் காணப்படும். வாலில் ரோமங்கள் இருக்காது. தனது வாலை தானே கடித்துக் கொள்ளும். காலால் கண்களை தேய்த்துக் கொள்ளும். அதிகமான பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் ஆட்டின் வால்தாழ்ந்து விடும் சூழல் ஏற்படும்.

தேவையான பொருட்கள்: வெளி மருந்து: ஆடுதின்னாப்பாளை இலை, வரிக்குமட்டி இலை, வேப்பெண்ணெய் 100 மி.லி. நெய் 25 கிராம், வரிக்குமட்டிக்காய் 1.

உள் மருந்து': சிறியாநங்கை, ஆடாதோடை இலை வகைக்கு 5 கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 15 கிராம்.

சிகிச்சை முறை: வெளி மருந்து:

1) ஆடுதின்னாப்பாளை இலை, வரிக்குமட்டி இலைச்சாறு இரண்டையும் அரைத்து 100 மி.லி. சாறு எடுத்துக் கொள்ளவும். இதோடு 100 மி.லி. வேப்பெண்ணெயை சேர்த்து காய்ச்சவும், மிதமான சூட்டில் பாதிக்கப்பட்ட இடத்தில் பூசவும்.

2) இரண்டு வரிக்குமட்டிக்காயில் உட்புறச்சதையை எடுத்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவவும்.

3) 25 கிராம் ஆடுதின்னாப்பாளை இலையை அரைத்து நெய் 25 கிராம் கலந்து பாதிக்கப்பட்ட இடத்தில் பூசவும்.

உள் மருந்து:

1) சிறியாநங்கை இலை, ஆடாதோடை இலை 5 கிராம் வீதம் எடுத்து மற்றும் இதோடு சுக்கு, மிளகு, திப்பிலி 5 கிராம் வீதம் சேர்த்து ஒரு லிட்டர் நீரிலிட்டு கஷாயமாக காய்ச்சி இதை இரண்டு வேளையாக மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு கொடுக்கவும்.

2) பஞ்ச தீபாக்கினி சூரணம்: 15 கிராம் வீதம் இரண்டு வேளை ஐந்து நாட்களுக்கு கொடுக்கவும்.

## 31. அடிபட்ட வீக்கம், இரத்தக்கட்டு

அறிகுறிகள்:

உடலில் அடிபட்டிருத்தல், வீக்கம், கட்டி, வலி மற்றும் இரத்தக்கட்டு. கட்டியானது கனமாக இருக்கும், கட்டிகள் நிறம் மாறும்.

காரணம்:

ஆடுகள் மேய்ச்சலுக்கு செல்லும்போது கீழே விழுதல், ஆடுகள் ஒன்றுடன் ஒன்று முட்டிக் கொள்ளுதல் மற்றும் பள்ளங்களில் தடுமாறி கீழே விழுதல்.

தேவையான பொருட்கள்:

தவிடு 125 கிராம், முடக்கத்தான் 50 கிராம், பிரண்டை 50 கிராம், பூண்டு 50 கிராம், வெற்றிலை 2, ஆடாதோடை, துளசி இரண்டும் வகைக்கு 25 கிராம், சீரகம் 10 கிராம்.

வைத்தியம்

1) தவிட்டை நன்கு வறுத்து துணியில் கட்டி மிதமான சூட்டில் வீக்கம், கட்டி மேல் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

2) முடக்கத்தான், பிரண்டை வகைக்கு 50 கிராம் மற்றும் பூண்டு மூன்றையும் சேர்த்து அரைத்து பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் இரண்டு வேளை பத்து போட வேண்டும். மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை பத்து போடலாம்.

3) வெற்றிலை 2, ஆடாதோடை, துளசி (இரண்டும் வகைக்கு 25 கிராம், சீரகம் 10 கிராம் இவற்றை 1/2 லிட்டர் தண்ணீரில் சேர்த்து, தண்ணீர் பாதியாகும் வரை காய்ச்சி 125 மி.லி. அளவு வீதம் கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு வேளை உள்ளுக்குள் கொடுக்கவும். இப்படி ஐந்து நாட்கள் கொடுக்க வேண்டும். ஒரு வாரம் வரை ஆடுகளின் உடல் மேல் தண்ணீர் படக்கூடாது. முடக்கத்தான் பிரண்டை .

– ஜேக்கப், நாசரேத், தூத்துக்குடி மாவட்டம்.

## 32. சொக்கிக்கொள்ளுதல்

அறிகுறிகள்:

ஆடுகளின் வயிறு ஊதி இருக்கும். சோர்வாக இருக்கும். இரை எதுவும் எடுக்காது.

தேவையான பொருட்கள்:

புளி 100 கிராம், சர்க்கரை 100 கிராம், துத்தி இலை 50 கிராம், திரிகடுகு சூரணம் 150 கிராம், உப்பு 10 கிராம்.

வைத்தியம்

1) 1/2 லிட்டர் தண்ணீரில், புளி 100 கிராம், சர்க்கரை 100 கிராம் அரைத்து ஆடுகளுக்கு, உள்ளே கொடுக்கவும்.

2) 50 கிராம் துத்தி இலையை அரைத்து 125 மி.லி. தண்ணீரில் கலக்கவும். இதோடு திரிகடுகு சூரணம் 15 கிராம், உப்பு 10 கிராம் கலந்து, இக்கலவையை ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையாக இருவேளை கொடுக்கவும்.

–கோவிந்தன். செல்லியம்பாளையம். சேலம்.

## எலும்புமுறிவு தைலம்

நான் ஒரு தடவை மலையேறும் சமயம் பாறையில் தடுக்கி விழுந்துவிட்டேன். இதனால் எனக்கு கால் எலும்பு (மொழிக்கு கீழ்) உடைந்து பிளந்து விட்டது. உடனே ஆஸ்பத்திரிக்கு டாக்டரிடம் கொண்டு சென்றார்கள். டாக்டரால் இதற்கு ஆபரேஷன்தான் பன்ன வேண்டும் எனக் கூறி அனுப்பி விட்டார்கள். நான் சுயமாக எனக்குத் தெரிந்த வைத்தியத்தை கடைபிடித்தேன். தற்சமயம் முற்றிலும் குணமாகி நடந்து வருகிறேன்.

நான் கடைபிடித்த வைத்யம் : எலும்பொட்டி தழை, விராலி, சதையொட்டி, ஆடையொட்டி, வெட்டுக்காய்பூண்டுதழை, தகரை இலை, ஊமத்தை இலை, கடுகு எண்ணெயில் காய்ச்சி பயன்படுத்த வேண்டும். இதில் பச்சைக்கற்பூரம், புதினாஉப்பு, ஓமம், உப்பு, பெருங்காயம் ஒவ்வொன்றும் 5 கிராம் சேர்த்து காய்ச்ச வேண்டும். பின்னர் இதனை பயன்படுத்தலாம்.

செந்தில்குமார், வர்ம ஆசான், 97,
பிள்ளையார் கோவில் தெரு, ஓம் சக்தி கோவில் அருகில், பொம்மிடி, தருமபுரி மாவட்டம் – 635301
செல் : 9345572830

## இயற்கை வேளாண்மை பயிர் சாகுபடி

(சென்ற இதழில் பக்கம்: 11 ல் வெளியிடப்பட்ட வைத்ய முறைகளின் தொடர்ச்சி)

**1. மூலிகை பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல்**

தயாரிக்கத் தேவையானவை :

வேப்பங்கொட்டை – 1 கிலோ, சோற்றுக் கற்றாழை – 1 கிலோ, நொச்சி இலை – 1 கிலோ, எருக்க இலை – 1 கிலோ, ஆடாதொடை இலை 1 கிலோ.

தயாரித்துப் பயன்படுத்தும் முறை :

வேப்பங்கொட்டையை முதலில் 2–3 மணி நேரம் நீரில் ஊற வைக்க வேண்டும். இந்த பொருட்கள் அனைத்தையும் தனித்தனியாக அரைக்க வேண்டும். அரைக்கும் சமயம் சிறிது நீர் சேர்க்கலாம். பின்னர் அனைத்தையும் ஒன்று சேர்த்த கலவை சுமார் 7 லிட்டர் வரும். அல்லது 7 லிட்டர் வருவதற்கு சிறிது நீர் சேர்த்துக் கொள்ளலாம். இதனை ஓர் ஏக்கர் பயிருக்கு தெளிப்பதற்கு போதுமானது. இந்தக் கலவையை 3 நாட்கள் அப்படியே வைத்து விட வேண்டும். இதனை வடிகட்டிய பிறகு 700 மி.லி. மருந்துக் கரைசலை 10 லிட்டர் நீரில் சேர்த்து ஸ்பிரேயர் கொண்டு பயிர் நிலங்களில் தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 10 டேங்க் தெளிக்க வேண்டும். பூச்சி நோய் தாக்குதலுக்கு ஏற்றவாறு இதனை இரு முறைகள் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். பஞ்சவ்யா தெளித்த பின் பூச்சி கொல்லி மருந்து மீண்டும் பஞ்சகவ்யா என மாறி மாறி 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

**2. பீஜாமிர்தம் தயார் செய்தல்**

சாணம் 5 கிலோ, கோமியம் 5 லிட்டர், தண்ணீர் 20 லிட்டர், வரப்பு மண் ஒரு கைப்பிடி. மேற்கூறியவற்றை கலந்து வைக்க வேண்டும். இத்துடன் 12 மணி நேரம் கழித்து சுண்ணாம்பு (சுண்ணாம்பு 50 கிராம்) சேர்க்க வேண்டும். பொதுவாக நடவுக்கு விதையிட விதைகளை பீஜாமிர்தத்தில் 2 மணி நேரம் ஊற வைத்து பின்பு எடுத்து உலர வைத்து சணல் சாக்கில் கட்டி வைத்துக் கொள்வார்கள். ஆனால் நேரடி விதைப்புக்கு ஒரு பாலீதீன் படுதாவில் விதைகளை பரப்பி பின்பு பீஜாமிர்தத்தில் நனைத்தால் போதுமானது. பின்பு நிழலில் உலர வைத்து எடுத்து ஒரு சணல் சாக்கில் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

**3. மீன் அமினோ அமிலம்தயார் செய்தல்**

ஒரு கிலோ மீன் கழிவுடன் ஒரு கிலோ வெல்லம் (கழிவு வெல்லம் குறைந்த விலையில் கிடைக்கும்), வாழைப்பழம் 3 சேர்த்து ஒரு பாத்திரத்தில் அப்படியே 30 நாட்கள் வைத்து விடவும். இதிலிருந்து சுமார் 600–700 மி.லி. கரைசல் கிடைக்கும். இதனை தெளிப்பானில் 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி கரைசல் என்ற விகிதத்தில் சேர்த்து தெளிக்கலாம். நட்ட 20 நாளிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பயிர் இரசாயன உரம் இல்லாமலேயே செழித்து வளரும். ஓர் ஏக்கருக்கு போதுமானது.

**4. ஜீவாமிர்தம் தயார் செய்தல்**

மாட்டு சாணம் – 15 கிலோ, கோமியம் – 15 லிட்டர், வெல்லம் – 2 கிலோ, பயறு வகை 2 கிலோ (ஊற வைத்து அரைத்தது). பின்னர் ஒரு கைப்பிடி அளவு மண் நிலத்திலிருந்து எடுத்து போடவும். இதனை நன்கு கலந்து விட வேண்டும். இப்படியாக 2 நாட்கள் கலக்கவும். 12 மணி நேரம் கழித்து 7 நாட்கள் வரை இதனை பயன்படுத்தலாம். பின்னர் இந்தக் கரைசலை 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி. என்ற அளவில் கலந்து நிலத்திற்கு மண்ணில் ஊற்றலாம். அல்லது பாசனநீரில் கலந்து விடலாம். இது ஓர் ஏக்கருக்கு போதுமானது. இந்த கரைசலை ஒரு மாதம் வரை பயன்படுத்தலாம்.

**5. கனஜீவாமிர்தம் தயார் செய்தல்**

உலர்ந்த மாட்டு சாணத்தை எடுத்து ஜீவாமிர்தம் கரைசலில் போட்டு உலர வைத்து சணல் பையில் போட்டு கட்டவும். இதனை எடுத்து பயிர்களுக்கு அடிப்பாகத்தில் தூவ வேண்டும். (கனஜீவாமிர்தம் தயாரிக்க பசும் சாணம் 100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயறு மாவு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். உப்புமா பதம் வருவதற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு நாட்டு மாட்டுக் கோமியத்தை சேர்க்க வேண்டும். பின்பு உருட்டி நிழலில் 48 நேரம் காய வைத்து தேவைப்படும் போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்). இந்த கனஜீவாமிருதத்தை ஏக்கருக்கு ஒரு பயிர் பருவத்திற்கு 400 கிலோ அளவில் தூவிவிடலாம். இதனை 20 நாட்களுக்கு ஒரு தடவை சுமார் 100 கிலோ தூவ வேண்டும்.

**6. இஞ்சி–பூண்டு–மிளகாய் கரைசல்**

தேவையான பொருட்கள்: பூண்டு –1கிலோ, பச்சை மிளகாய் –அரை கிலோ, இஞ்சி – அரை கிலோ, மண்ணெண்ணெய் 100 மில்லி.

தயாரிப்பு முறை: பூண்டு ஒரு கிலோ எடுத்து மண்ணெண்ணெயில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் இதனை எடுத்து நல்ல விழுதாக வருமாறு அரைத்துக் கொள்ளவும். அரை கிலோ பச்சை மிளகாய் மற்றும் அரை கிலோ இஞ்சி எடுத்து தனித்தனியாக விழுதாக அரைத்துக்கொள்ளவும்.

பின்னர் இவை அனைத்தையும் நன்கு கலந்து, ஒரு காடாத்துணியில் வைத்துக்கொள்ள வேண்டும். (ஜிலேபி பிழிவது போல் வைத்துக்கொள்ளவும்)

இவ்வாறு தயார் செய்த காடாத்துணிக் கலவையை 6 லிட்டர் தண்ணீரில் முக்கி, ரசத்தை வடிக்கவும். இப்போது நமக்கு 6 லிட்டர் கரைசல் தயார்.

இந்தக் கரைசலை பூச்சித்தாக்குதல் குறைவாக இருந்தால் 500 மில்லியை 9.5 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளுக்கு தெளிக்க வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால், ஒரு லிட்டர் எடுத்து, 9 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகள் மீது தெளித்தால், புழு வகைப் பூச்சிகள் முற்றிலும் கட்டுப்படும்.

இதைத்தொடர்ந்து காதி சோப்பைத் தண்ணீரில் கரைத்து அடித்தால், அது நாம் அடிக்கும் இயற்கை பூச்சிமருந்து கரைசலைச் செடியின் மீது ஈர்த்து வைத்துக்கொள்ள உதவும். இதன் மூலம் இக்கரைசலின் வீரியமும் அதிக நேரம் செடியில் இருக்கும். இதை தயார் செய்யும்போது கையுறை அணிய வேண்டியது கட்டாயம். கை எரிச்சல் அதிகமாக இருக்கும் என்பதால் சற்று கவனமாக இருக்க வேண்டும்.

### 7. உயிர் உரம் கொண்டு ஊட்டமேற்றிய தொழுஉரம் அளித்தல்

ஊட்டமேற்றிய தொழுஉரம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ இட வேண்டும். ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க மக்கிய தொழுஉரம் 100 கிலோவில் சூடோமோனஸ், பாஸ்போபேக்டீரியம், அசோஸ்பைரில்லம் தலா 2 கிலோ வீதம் கலந்து வைக்க வேண்டும். இந்த கலவையில் 10 லிட்டர் நீரில் ஒரு கிலோ சர்க்கரை கலந்த கரைசல் தெளிக்க வேண்டும். ஒரு வாரம் வரை வைத்து பெருக்கி பின்னர் நெல்லுக்கு உரமாக இடலாம். பஞ்சகவ்யாவுடன் சூடோமோனஸ்விரிடிஸ் டேங்கிற்கு 100 கிராம் சேர்த்து தெளித்தால் பயிருக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். அமிர்தக்கரைசலுடன் பாஸ்போபேக்டீரியம், அசோஸ்பைரில்லம் ஏக்கருக்கு 2 கிலோ வீதம் கலந்து நீர்ப்பாசனம் செய்யலாம்.

உயிர் உரங்களை விதை நேர்த்தி / மண்ணிற்கு இடுதல் / பயிருக்கு தெளித்தல்:

உயிர் உரங்களை 5–7 கிராம் அளவு எடுத்து ஒரு கிலோ விதைக்கு பயன்படுத்தலாம். அரிசி கஞ்சி 1/2 லிட்டர் அல்லது மைதா மாவுடன் பிசைந்து விதை நேர்த்தி செய்யலாம். இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை சேர்க்கக்கூடாது. பாஸ்போ பாக்டீரியம்: நமது மண்ணில் மணிச்சத்து உரத்தை எடுத்து தாவரத்திற்குக் கொடுக்கும்.

அசோஸ்பைரில்லம்: காற்றில் உள்ள தழைச்சத்தை எடுத்து மண்ணிற்கு சேர்க்கும். நெல், பருத்தி, கம்பு, சோளம், கரும்பு, காய்கறி பயிர்களுக்கு இதனை பயன்படுத்தலாம். இதனை ஓர் ஏக்கருக்கு 250 மி.லி. தொழுஉரத்தில் கலந்து தூவலாம் அல்லது விதை நேர்த்தியும் செய்யலாம். ரைசோபியம்: காற்றில் உள்ள தழைசத்தை எடுத்து வேர் பகுதிக்கு சேர்க்கும். இதனை பயறு வகை செடிகளுக்கு (உளுந்து, பாசி பயறு, துவரை, நிலக்கடலை, அவரை) பயன்படுத்தலாம். பேசில்லஸ்: மண்ணில் வேர் அழுகல் நோய், இலைப்புள்ளி நோய் வருவதை தடுக்கும். இதனை 10 கிராம் எடுத்து ஒரு லிட்டர் நீரில் கரைத்து நாற்றுகளை 15 நிமிடங்கள் நனைத்து நடவு செய்யலாம். பயிர்மேல் தெளிக்கலாம் அல்லது நிலத்தில் தொழு உரத்துடன் கலந்து தூவலாம்.

நீல பச்சை பாசி: ஓர் ஏக்கருக்கு 4 கிலோ இடுவது 15–20 கிலோ யூரியா போடுவதற்கு சமம்.

### 8. புண்ணாக்கு கரைசல்

செய்முறை: கடலை புண்ணாக்கு – ஒரு கிலோ, வேப்பம் புண்ணாக்கு – ஒரு கிலோ, புங்கம் புண்ணாக்கு – ஒரு கிலோ, இலுப்பம் புண்ணாக்கு – ஒரு கிலோ, தேங்காய் புண்ணாக்கு – ஒரு கிலோ, ஆமணக்கு புண்ணாக்கு – ஒரு கிலோ, எள் புண்ணாக்கு – ஒரு கிலோ. இவை அனைத்தையும்தூள் செய்து 20 லிட்டர் கோமியம், நாட்டுசக்கரை 2 கிலோ, வாழைப்பழம் – 30 ஆகியவற்றை சேர்த்து 15 நாட்கள் ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு இதனைப்பயன்படுத்தலாம். நீர்பாசன நீரில் கலந்து விடுவதாக இருந்தால் புண்ணாக்குகரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். பயிருக்கு தெளிப்பதாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு புண்ணாக்கு கரைசல் 25 லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் (10 லிட்டர் நீருக்கு 250 மி.லி. புண்ணாக்கு கரைசல் சேர்த்து தெளிக்கவேண்டும்).

**9. பலதானிய பயிர் விதைப்புமூலம் பசுந்தாள் உரம் கொடுத்தல்**

நிலத்திற்கு இயற்கை வழியில் ஊட்டம் கொடுக்க பலதானிய பயிர்களை விதைக்கலாம். பலதானிய பயிர் விதைப்பிற்கு தேவைப்படும் பயிர் விதைகள் கொள்ளு, உளுந்து, காராமணி, நெல், கம்பு, சோயா பீன்ஸ், புளியங்கொட்டை, வேப்பங்கொட்டை, பப்பாளி, கொத்தமல்லி, வெந்தயம், கடுகு, சீரகம், தக்கை பூண்டு.அனைத்தையும் சேர்த்து ஒரு ஏக்கருக்கு 27 கிலோ விதைக்கலாம். (வீட்டில் உள்ள விதைகளை அதிகமாகவும் வெளியில் விலைக்கு வாங்குவதை குறைத்தும் சேர்த்துக் கொள்ளலாம்).

சிறிய விதைகளை தனியாகவும், பெரிய விதைகளை தனியாகவும் விதைக்க வேண்டும். விதைத்த 45 நாட்கள் கழித்து உழுது மண்ணோடு சேர்க்கவும், இவ்வாறு செய்வதினால் உர செலவு குறையும்.

அல்லது

**தானிய வகை –** சோளம் 1 கிலோ, கம்பு 500 கிராம், திணை 300 கிராம், சாமை 500 கிராம், வரகு 300கிராம்.

**பயறு வகை –** பாசிபயறு 2 கிலோ, உளுந்து 2 கிலோ, கொள்ளு 1 கிலோ, தட்டைப்பயிறு 1 கிலோ, துவரை 1 கிலோ, எண்ணை வித்து– எள் 500 கிராம், நிலக்கடலை 3 கிலோ, ஆமணக்கு 3 கிலோ, சூரியகாந்தி 1 கிலோ, சோயா 2 கிலோ.

**வாசனை பொருட்கள் –** சோம்பு 200 கிராம், கடுகு 200 கிராம், வெந்தயம் 200 கிராம், மல்லி 500 கிராம். உரசெடிகள்– சனப்பு 3 கிலோ, தக்கை பூண்டு 2 கிலோ, கொழுஞ்சி 1 கிலோ, அகத்தி 1 கிலோ, சித்தகத்தி 1 கிலோ. இவை அனைத்தையும் 25 முதல் 30 கிலோ அளவில் எடுத்து ஓர் ஏக்கர் நிலத்தில் விதைத்து நாற்பதாவது நாளில் மடக்கி உழுதல் வேண்டும்.

## அரிய மூலிகைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஆசிரியை

கோவிட் தொற்று காலத்தில் நிலவேம்பு கஷாயத்தின் பயன்பற்றி அறிந்த நிலையில் மூலிகை வாசம் நோயற்ற சுவாசம் என்ற கருத்தினை மனதில் கொண்டு ஒரு மூலிகைக்கு எவ்வளவு பயன் இருக்கிறது என யோசித்து மற்ற மூலிகைகளைப் பற்றி தேட ஆரம்பித்ததன் பலனாக இன்று



மூலிகைகள் மணம் கமழும் மூலிகை தோட்டத்தை அமைத்து பராமரித்து வருகிறார் மதுரை நாட்டார்மங்கலத்தைச் சேர்ந்த சுபஸ்ரீபாபு. இவர் மதுரை வரிச்சியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணி புரிந்து வருகிறார். கோவிட் 19 காலத்தில் மூலிகைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது குறித்து தெரிந்து கொண்டார். அதைக் தொடர்ந்து வீட்டில் இருக்க நேர்ந்தபோது நிலவேம்பு கஷாயம் தயாரித்து வீடுகள் தோறும் வழங்கினார். இவர் 5 ஆண்டுகளுக்கு முன் சுமார் 300 மூலிகைகளுடன் தோட்டம் உருவாக்கினார். தனது வீட்டில் 100 வகை மூலிகைப் செடிகளை தொட்டியில் வளர்த்து வருகிறார். இவர் சாதாரணமாக கிடைக்கும் மூலிகைச் செடி முதல் அழிந்து வரும் பட்டியலில் உள்ள மூலிகை இனங்களையும் தேடிக் கண்டறிந்து அவற்றையும் வளர்த்து வருகிறார். அந்த மூலிகை தொட்டிகளை வீட்டில் வளர்க்க இடமில்லாத நிலையில் நாட்டார்மங்கலம் கலைவாணி நகரில் உள்ள தனக்கு சொந்தமான 50 சென்ட் இடத்தில் மூலிகை தோட்டம் உருவாக்கி அங்கு அடர்வன முறையில் ஆர்வத்துடன் வளர்த்து வருகிறார். இவரது அற்புதமான பணிக்கு கணவர் பாபு, நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலிகைகளை வளர்க்க உதவியாகவும் ஊக்கமளித்தும் வருகின்றனர். தோட்டத்தில் கருடகால் சஞ்சீவி, சங்கு நாராயண சஞ்சீவி, கரு கருநொச்சி, கருமஞ்சள், வெள்ளைத் தூதுவளை, செவ்வகத்தி, சதாவாரி எனும் தண்ணீர்விட்டான் கிழங்கு, வலம்புரிச், கடம்ப மரங்கள் உள்ளிட்ட அரிய வகை மூலிகைகளை வளர்த்து வருகிறார். மூலிகைச் செடிகளின் தாவரப்பெயர் மற்றும் பலன்களை

தனித்தனியாக அறிவிப்பு பலவகையில் எழுதி வைத்துள்ளார். ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு தனது மூலிகை தோட்டத்தை பார்வையிட அனுமதிக்கிறார். இவரது சாதனையை அறிந்த பிரதமர் மோடி மனதின் குரல் எனும் மன்கிபாத் உரையில் ஆசிரியை சுபஸ்ரீயை மனதார வாழ்த்தி பாராட்டிள்ளார். சில மூலிகைகளின் விலையைப் பார்த்து வாங்காமல் போகக் கூடாது என்பதற்காக அரிய வகை மூலிகைகளை உற்பத்தி செய்து வருகிறார். தனது அடர்வனத்தை பார்த்து பரவசப்படும் இயற்கை மற்றும் மூலிகை ஆர்வலர்களுக்கு மூலிகை கன்றுகளை ஆசிரியை சுபஸ்ரீ இலவசமாக வழங்கி வருகிறார். மூலிகை தோட்டம் அமைத்ததன் நோக்கம் இயற்கை வாழ்வியல் பற்றி இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே என்றால் அது மிகையாகாது.

**இவரது தோட்டத்தில் உள்ள மூலிகைத் தாவரங்களின் பெயர்கள் மற்றும் பயன்பாடுகள்**

மூலிகைத் தாவரங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள்

1. பதிமுகம் – உடலை குளிர்விக்கவும், குடிநீரில் சேர்த்துப் பயன்படுத்தவும் உதவுகிறது.

2. வாதநாராயணன் – மூட்டு வலி மற்றும் வாத நோய்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

3. கல்தாமரை – மலையில் முளைத்த கல்தாமரை சுக்கிலத்தையும் பலத்தையும் விருத்தியாக்கும்.

4. மாகாளிக்கிழங்கு – உடல் வலிமையை அதிகரிக்கவும் உட்சூடு, பித்தம் நீங்கும்.

5. கருநொச்சி – வாதவலி, கபம், மண்டைக்குடைச்சல் நீங்கும் ஆகியவற்றிற்கு பயன்படுகிறது.

6. கருமருது – இருதய சும்பந்தமான பல வியாதிகள், குணமடையும், இரத்தசீத பேதி .

7. கருஇஞ்சி – செரிமானத்தை மேம்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

8. தான்றிக்காய் – செரிமானத்திற்கு உதவுகிறது: இரத்த மூலம், கண் பார்வை, திரிபலா மருந்தில் பயன்படுத்தப்படுகிறது.

9. அஸ்வகந்தா – உடல் வலிமை, மனஅழுத்தம் குறைப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவுகிறது.

10. எலும்பொட்டி – எலும்பு முறிவு மற்றும் மூட்டு வலிக்கு பயன்படுத்தப்படுகிறது.

11. தொழுகண்ணி – கிருமி தாக்கத்தை குறைக்கும், உடல் வலுவடையும் காயங்கள் மற்றும் தோல் நோய்களுக்கு பயன்படுகிறது.

12. சதாவாரி – பெண்களின் உடல்நலம் மற்றும் உடல் சக்திக்கு பயன்படுகிறது.

13. நறுமுன்னை – வாதம், பசிமந்தம், மயக்கம் நீங்கும்.

14. கருஊமத்தை – வெளிப்பூச்சாக வலி மற்றும் வீக்கத்தைக் குறைக்க பயன்படுத்தப்படுகிறது.

15. தழுதாழை – பக்கவாதம் முதலான 80 வீதமான வாதம், குடைச்சல் தேகக் நீங்கும்.

16. சிறு தேக்கு – மருத்துவப் பயன்பாடு கொண்ட மரவகை

17. சர்ப்பகந்தா –உயர் இரத்த அழுத்தம் மற்றும் நரம்பு தளர்ச்சிக்கு பயன்படுகிறது.

18. நேந்திரம் பூண்டு – கண் புரை, கண் சார்ந்த பிரச்சனை, ஒற்றைத் தலைவலி .

19. கருஞ்செம்மை – பாரம்பரிய மருத்துவத்தில் பயன்பாடு கொண்டது. ஒற்றைத் தலைவலி, முறையற்ற மாதவிடாய் சீரடையும்.

20. அந்தரத்தாமரை – அமுகிண ரணம், ஆசனகுத்தல், கரப்பான்.

21. இலைப்பிரண்டை – எலும்பு வலிமை மற்றும் மூட்டு வலி, செரிமானத்திற்கு உதவுகிறது.

22. முட்சங்கன் – பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. விடாத காய்ச்சல், சொறி, சிரங்கு கட்டிகள் குணமடையும்.

23. வெள்ளை கல்யாண முருங்கை – குழந்தை பேறு, உதிரக்கட்டு, உடல் வலிமை.

24. சிவப்பு அகத்தி – வெப்பம் தனியும், கண்களுக்கு குளிர்ச்சி, சிறுநீர் எரிச்சல் நீங்கும். ஊட்டச்சத்து பெறவும் உதவுகிறது.

25. வெண் தூதுவளை – சளி, இருமல் மற்றும் தேக புஷ்டி, வனப்பு, தாதுவிருத்தி, ஆஸ்துமாவிற்கு பயன்படுகிறது.

26. சிவப்பு மருதாணி – கை, கால் அலங்காரம் மற்றும் குளிர்ச்சி தர பயன்படுகிறது.

27. ஆடையொட்டி – காயங்கள் மற்றும் தோல் நோய்களுக்கு பயன்படுகிறது.

28. புத்திரஜீவி – பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

29. சங்க நாராயண சஞ்சீவி – சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மூலிகை

30.கருட கால் சஞ்சீவி – உடல் வலிமை மற்றும் பாரம்பரிய மருத்துவப் பயன்பாடு கொண்டது.

31. மிருக சஞ்சீவி சர்க்கரை – சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.
32. சஞ்சீவி – உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பாரம்பரிய மூலிகை
33. நாகமல்லி – அலங்காரச் செடியாகவும் மருத்துவப் பயன்பாட்டிற்கும் பயன்படுகிறது.
.34. நாகதந்தி – தோல் நோய்கள் மற்றும் மருத்துவப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது.
35. நஞ்சுமுறிச்சான் – விஷக்கடி தொடர்பான பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

திருமதி. சுபஸ்ரீ , மூலிகை வனம், வரிச்சியூர் அருகில்,
மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம் – 625020
செல் : 7904815040

## முனீஸ்வரனின் வைத்ய முறைகள்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காக்கிவாடன் பட்டி கிராமத்தில் வசித்து வரும் முனீஸ்வரன் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக ஆடு வளர்க்கும் தொழிலை செய்து வருகிறார்.

இங்கு உள்ள கால்நடைகளுக்கு சிறு சிறு வைத்தியங்கள் செய்து வருகிறார்.

**மடிநோய்க்கு**

பச்சரிசி மாவு, உளுந்து மாவு, சிறிது மஞ்சள்தூள் சேர்த்து 1 எலுமிச்சம்பழம் பிழிந்து இந்த களிம்பை மடியை நன்றாக கழுவி காலை மாலை 5 நாள் மடியில் தடவி வர மடிநோய் குணமாகும்.

**காம்பு நோய்க்கு**

காம்பு ஒருபுறம் வீங்கி பால் வராமல் இருந்தால் சிறியநங்கை இலை சாறு 100 மி.லி. ஒரு முறை உள்ளே கொடுக்க வேண்டும்.

**சினை தங்காமை**

சினை ஊசி போடுவதற்கு முன் சோற்றுக்கற்றாழை 1 மடல், வேப்பண்ணெய் 100 மி.லி. நாட்டுக் கோழி முட்டை ஒன்று உடைத்து சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**செந்நீர் கழித்தலுக்கு**

சூட்டினால் கால்நடைகளின் யூரின் சிவப்பாக வரும். இதற்கு சீரகம், வெந்தயம் இடித்து மோர் அல்லது நீச்சத்தண்ணீருடன் கலந்து 2 நாள் காலையில் 250 மி.லி. உள்ளே கொடுக்கவும்.

**மஞ்சள் காமாலை**

நவாமரபட்டை அல்லது நாவல்பழக்கொட்டை அரைத்து புளித்த மோரில் ஒரு தேக்கரண்டி சீரகம் அரைத்து சேர்த்து 4 நாட்கள் காலையில் உள்ளே கொடுத்து வர வேண்டும்.

– தொகுப்பு: சங்கீதா, சேவா

## வாசகர் வட்டம்

### மாட்டு கண்ணில் நீர் வடிந்தால்

எங்கள் பசு மாட்டின் கண்ணில் நீர் தொடர் கசிவுக்கு ஏதேனும் மூலிகை மருந்து உண்டா? – மருதப்பா கோசாலா

ஆசிரியர் பதில்:

முருங்கை இலை ஒரு கைப்பிடி, மிளகு – பத்து மிளகு இரண்டையும் சேர்த்து அரைத்து ஒரு துணியில் கட்டி சாறு எடுத்து கண்ணில் நாலு சொட்டு விட வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு முறை மூன்று நாட்கள் கடைபிடித்து வர வேண்டும் மாட்டுக்கு, குட்டிற்கு தினமும் அகத்தி கீரை ஒரு கட்டு வெல்லம் 100 கிராம் கொடுத்து வரவும்.

இதை கடந்த இரண்டு தினங்களாக கொடுத்து வருகிறோம். கைப்பிடி அளவு முருங்கைக் கீரைக்கு 10 மிளகு நமக்கு தேவையானது நாலு சொட்டு தான். இதில் கிடைக்கும் சாற்றை மூன்று நாட்களுக்கு பயன்படுத்தலாம். மிளகுக்கு பதில் சிறிது கல் உப்பு சேர்த்து சாறு எடுத்து கொள்ளலாம். கண்ணில் கருநிற நீர் வடிவது தற்போது நின்றுவிட்டது. ஆனால் கண் மிகவும் சிவந்து காணப்படுகிறது.

இதற்கு சிலர் கீழ்க்கண்ட இரண்டு வழிமுறைகளை கூறியுள்ளனர்.

1. வெற்றிலை மற்றும் புகையிலையை மென்று வாயில் வைத்து, அதன் எச்சிலை பாதிக்கப்பட்ட கண்ணில் விட வேண்டும்.

2. நயமான நாட்டு கருப்பட்டியை சுத்தமான துணியில் கசக்கி, அதில் வரும் திரவத்தை கண்ணில் விட வேண்டும்.

இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்தால், கண்ணில் இருக்கும். புண் அறுந்து வெளியேறிவிடும் என்று கூறுகின்றனர். இருப்பினும் இது வரை இந்த வழி முறைகளின் எதையும் நான் முயற்சி செய்ய வில்லை.

ஆசிரியர் பதில் :

வெற்றிலை சிறிது உப்பு சேர்த்து நசுக்கி வரும் சாற்றை கண்ணில் நாலு சொட்டு விட்டு வாருங்கள்

தற்போது எங்கள் பசு மாட்டின் கண் பரிபூரணமாக குணமடைந்து விட்டது. மிக்க நன்றி –மருதப்பா

மருதப்பா கோசாலா, பாலசுப்ரமணியன்வெற்றிவேல்
பாலன் இல்லம், மருதப்பர் கோவில் தெரு
பத்மநேரி நாங்குநேரி தாலுகா,
திருநெல்வேலி மாவட்டம் –627502
செல் : 8838261486, வாட்ஸ்அப் : 9445906895

**எம். எஸ். சுவாமிநாதன் வழிகாட்டுதலில் கலைவாணியின் அனுபவங்கள்**



என்னோட பெயர் கலைவாணி ராஜேந்திரன் (வயது 65). நான் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா பசுபதி கோயில் கிராமத்தைச் சார்ந்த ஒரு விவசாய பெண்மணி. நான் கடந்த 36 வருடங்களாக விவசாயத்தில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றேன். கடந்த 2004 ஆம் ஆண்டு திருவையாற்றில் கிராம வள மையம் துவங்கப்பட்டது. முதல் எனக்கு பேராசிரியர் எம்.எஸ் சுவாமிநாதன் அவர்களின் யோசனைப்படி திருவையாற்றில் இருக்கக்கூடிய கிராம வள மையத்தினுடைய செயல்பாடுகளில் என்னை முழுமையாக இணைத்துக் கொண்டேன்.

கிராம வளமையத்தினுடைய தொடர்ச்சியான நிகழ்ச்சிகளில் பங்கேற்றதன் மூலமாக எனக்கு வேளாண்மையில் புதிய தொழில் நுட்பங்களையும் அதை பயன்படுத்துவதால் ஒரு விவசாயிக்கு என்ன மாதிரியான நன்மைகள் கிடைக்கும் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

இது மட்டுமல்லாமல் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ஒரு சாதாரண விவசாயிக்கு எந்த அளவுக்கு ஒரு பயனுள்ளதா இருக்கும் என்பதை கிராம வள மையம் மூலமாக தெரிந்து கொண்டேன்.

கிராம வள மையத்தின் மூலம் எனக்கு பேராசிரியர் ஐயாவுடன் நிறைய தருணங்களில் உரையாடுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தது. பேராசிரியர் அவர்கள் உங்களுடைய கிராமத்தில் உள்ள மற்ற பெண் விவசாயிகளுக்கு நீங்கள் கற்று கொண்டவற்றை சொல்ல வேண்டும் என கூறி என்னை வாழ்த்தினார். அந்த சந்தர்ப்பங்கள் மற்றும் உரையாடல்கள் மூலமாக எனக்கு கிடைத்த ஆலோசனைகள் மற்றும் அனுபவங்கள் விவசாயத்தில் இன்னும் தீவிரமா ஈடுபட தாக்கத்தை ஏற்படுத்தியது.

பேராசிரியர் ஐயா சொன்ன ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு விஞ்ஞானியே என்ற பொன்மொழி என்னை போன்ற விவசாயிகளுக்கு வாழ்நாள் முழுவதும் புத்துணர்ச்சியை அளிக்கின்றது.

விவசாய பண்ணை பள்ளி கட்டுவதற்காக எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளையிலிருந்து ரூ. 3,85,000 கொடுக்கப்பட்டது. இதர செலவுகளை தன்னுடைய சொந்த செலவிலிருந்து அந்த பள்ளியை



மேம்படுத்தினார். பிறகு தன்னுடைய சொந்த நிலத்தை கொடுத்துள்ளார். விவசாயம் சார்ந்த ஆர்வத்தினாலும் அதிக பயிற்சிகளிலும் கலந்து கொண்டதாலும் மற்றவர்களுக்கு புதிய தொழில் நுட்பத்தை எடுத்து கூறியதினாலும் 2004 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நெல் விவசாய பெண்மணி என்ற சான்றிதழும் ரூ. 1,00,000 ரொக்கமாக எனக்கு வழங்கப்பட்டது. இந்த பரிசு ஸ்பிரேர் தயார் செய்யும் கம்பெனியான ஆஸ்பி என்ற நிறுவனம் இந்த பரிசு தொகையும், சான்றிதழும் பேராசிரியர் ஜே.பி அப்துல் கலாம் அவர்களிடமிருந்து பெற்று கொண்டேன்.

பேராசிரியர் அய்யா விவசாயத்துக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை மற்ற விவசாயிகளும் தெரிந்து கொள்ள எங்களுடைய கிராமத்தில் பண்ணை பள்ளி நடத்துவதற்கு என்னுடைய சொந்த இடத்தில் 2013 ல் ( 60x25)அமைத்து விவசாயிகள் பண்ணைப் பள்ளியில் நடைபெறக்கூடிய வகுப்புகளில் கலந்து கொண்டு அதன் மூலமாக நல்ல ஆலோசனைகள் பெற்று வருகின்றனர். இதற்கு பேராசிரியர் ஐயா

அவர்களின் ஊக்கமான வாழ்த்துக்கள் தான் காரணம். இதில் நம் நிறுவன பயிற்சி மட்டுமல்லாமல் வேளாண் சார்ந்த பயிற்சிகளும், வேளாண் பல்கலைக்கழகம், கால்நடைத்துறை தோட்டக்கலைத்துறை, மற்றும் பல நிறுவனங்கள் நடத்திய பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மத்திய தென்னை ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய தென்னை மரமேறும் பயிற்சி 18 வயதுக்கு மேல் 40 வயதிற்குட்ட இருபாலருக்கும் 80 (40 +40) பயிற்சி கொடுத்து சான்றிதழும் ரூபாய் 4500 மதிப்புள்ள தென்னை மரமேறும் கருவியும் நம் நிறுவனத்துடன் இணைந்து கொடுக்கப்பட்டது.

2024 ஏப்ரல் முதல் நம் பண்ணைப் பள்ளியில் பயிர் மருத்துவ முகாம் 49 நடைபெற்றது. இதில் 773 விவசாயிகள் கலந்து கொண்டு தங்களுடைய 773 பயிர் மாதிரிகளை ஆய்வு செய்து பரிந்துரை பெற்றனர். இடையில் விவசாயிகள் பயிர் பாதிப்பு ஏற்பட்டதாக கூறினால் பயிரினை போட்டோ எடுத்து (Whats app) ல் அனுப்பியோ நேரில் பயிரினை வள மையத்திற்கு எடுத்து சென்றோ அவர்களுக்கு தீர்வினை கிடைக்க செய்வேன்.

வீடுகள் தோறும் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் அமைக்க வேண்டும் என விழிப்புணர்வு கூட்டம் நடத்தி என்ன காய்கள் நடலாம் என பயிற்சி கொடுக்கப்பட்டது. இன்றைக்கு எங்கள் கிராமத்தில் தகவல் தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி விவசாயத்தில் லாபம் பெறுவதற்கு ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்படுகிறது. வல்லுனர்கள் நேரடியாகவும், ஆடியோ, வீடியோ, ஃபோன் நிகழ்ச்சிகள் மூலமாகவும் வழங்கப்படுகிறது. கோடைப்பயிர் உளுந்து, எள், பருத்தி பயிர்களுக்கு பூச்சி, நோய் பராமரிப்பு, அதிகம் பூக்கள், காய்கள் வைக்க ஆடியோ, வீடியோ, கான்பரன்ஸ் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. குறுவை, சம்பா, தாளடி நெல் சாகுபடிக்கு ஏற்ற நெல் விதை இரகங்கள் தேர்வு செய்தல், விதை நேர்த்தி தொழில் நுட்பங்கள், நாற்றங்கால் பராமரிப்பு பயிற்சி உயிர் உரங்கள் பயன்படுத்துவது பூச்சி, நோய் எவ்வாறு கண்டுபிடிப்பது அவற்றை கட்டுப்படுத்துவது பற்றிய தொழில் நுட்ப பயிற்சி கொடுக்கப்பட்டது. இலை வண்ண அட்டை பயன்படுத்தி உரம் மேலாண்மை, நுண்ணூட்டச்சத்து மேலாண்மை கொடுக்கப்பட்டது.

மிளகாய் பயிரில் ஆசியா கரும்பேன் கட்டுப்படுத்துவது குறித்த பயிற்சி நடைபெற்றது. பண்ணைப்பள்ளியில் குறுவை நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் குறித்த விழிப்புணர்வு குறித்த பேரணி நடைபெற்றது. பயிர்களை தாக்கக்கூடிய பூச்சி, நோய்களை பற்றிய விவரங்களையும் அதற்குண்டான தீர்வுகளையும் விளக்கப் படத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கலைவாணி ராஜேந்திரன், வடக்கு காடவராயர் தெரு
2, பசுபதி கோவில் அஞ்சல், பாபநாசம் தாலுகா
தஞ்சாவூர் மாவட்டம், செல் : 9025274876

## உழவர் உற்பத்தியாளர் நிறுவன மூலம் கோவிந்தம்மாளின் விவசாய முன்னேற்றம்




திருமதி. கோவிந்தம்மாள் வயது (51) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுகா, நல்லாமூர் என்று கிராமத்தில் 3 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். இவர் 15 வருடங்களாக செய்து வருகிறார். இவர் நெல், உளுந்து, மணிலா பயிர் வகைகளை உற்பத்தி செய்கிறார். எம்.எஸ் சுவாமிநாதன் அறக்கட்டளை மூலம் 2011–2012 ல் சுயஉதவி குழுவில் உறுப்பினராக சேர்ந்து மாத சேமிப்பு செய்து வந்தார். அப்போது இவருடைய நிலத்தில் பல வகையான பயிர் ரகங்களை விளைவித்து இந்த பகுதிக்கு ஏற்ற விளைச்சல் தரும் ரகத்தை தேர்வு செய்யும் முறை கையாளப்பட்டது. அதன்படி வம்பன், 4, 8, ரகங்களும் நிலக்கடலையில் வி.ஆர். 2, 10, நெல்லில் பீ.பி.டி. 37 ரகங்களும் சிறந்த விளைச்சல் தரும் ரகங்களாக பார்க்கப்பட்டது. பின்னர் இந்த

ரகங்களையே நிலத்தில் பயிர் செய்து வருகிறார். இவருடைய கிணறு தண்ணீரில்லாமல் தூர்ந்து விட்டது. இந்த கிணற்றை 3 கெஜம் ஆழப்படுத்தி சுற்று சுவர் கட்ட அறக்கட்டளையிலிருந்து ரூ. 70,000 ம் கொடுத்தார்கள். மேற்கொண்டு நாங்கள் ரூ. 1,50,000 ம் செலவளித்து கிணற்று பணி முடிந்து விட்டது. இதனால் தற்போது 3 மணிக்கு மேலாக நீர் பாய்ச்சி விவசாயத்தை விட்டு விடாமல் தொடர்ந்து செய்து வருகிறோம். பின்னர் நல்லாமூர் விவசாய உற்பத்தி நிறுவனத்தில் பங்கு உறுப்பினராக ரூ. 1100 கட்டி சேர்ந்துள்ளேன். இந்த நிறுவனத்தில் 1000 பேர் உறுபினர்களாக சேர்ந்தனர். இதில் 850 பெண்கள் அடங்குவர். நாங்கள் விவசாய உற்பத்தி பொருட்களை மதிப்பு கூட்ட கீழ்கண்ட கருவிகள் விவசாயதுறை மூலம் பெற்றுள்ளோம்: உளுந்து உரிக்கும் மிசின், நிலக்கடலை உடைக்கும் மிசின், எண்ணெய் எடுக்கும் செக்கு மிசின் போன்றன வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் செயல்பாட்டில் உள்ளன. இதற்கு வாடகை பணம் மாதம் ரூ. 3500 கொடுத்து வருகிறோம். இந்த மிசின்களை வைத்து அரைத்து கொடுக்கும் பொறுப்பு என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மாதம் ரூ. 9500 வருமானம் கிடைக்கிறது.

நெல்லுக்கு சணப்பை, காரமணி மற்றும் பலதானிய பயிர்கள் விதைத்து பசுந்தாள் உரமாக 45 நாட்களில் உழுது நிலத்தில் சேர்த்து விடுவோம். இதற்கு ஏக்கருக்கு 8 கிலோ பலதானிய பயிர் விதை தேவைப்படும். பூச்சி நோய்களுக்கு வேப்பெண்ணையை மணலுடன் கலந்து கரைசலாக்கி தெளிக்கிறேன். நெல்லில் ஏக்கருக்கு 30 மூடை கிடைக்கிறது. நிலக்கடலைக்கு பூச்சி நோய் வந்தால் சாணம் 1 கிலோ, கோமியம் 1 லிட்டர் கலந்து இத்துடன் இஞ்சி 1/4 கிலோ, பூண்டு 1/4 அரைத்து சேர்த்து விடுவேன். இதனை ஒரு வாரம் புளிக்க வைத்து பின் இந்த கரைசல் 100 மி.லி ஒரு டேங்கில் கலந்து தெளிப்பதால் இந்த வாசனைக்கு பூச்சி நோய் கட்டுப்படும். கோவிந்தம்மாளுக்கு சிறந்த விவசாய பெண்மணி விருது எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கோவிந்தம்மாள், க/பெ. ஆறுமுகம்
நல்லாமூர், திண்டிவானம் தாலுகா
விழுப்புரம் மாவட்டம், செல் : 7845953583

## பால் காம்பில் இரத்தம் கசிதல் மற்றும் ஈ தொல்லைக்கு



என்னுடைய பெயர் நிசுகுமாரி. ஹிமாசலபிரதேசத்தில் கங்கரா மாவட்டத்தில் கால்நடை களப்பணியாளராக வேலை செய்து வருகிறேன். 2022 ல் எங்களுக்கு கால்நடை மூலிகை வைத்ய பயிற்சியில் திரு. விவேகானந்தன், சேவா பயிற்றுநராக ஹிமாசலபிரதேசத்தில், பேஜ்நாத்திற்கு வந்து பயிற்சி கொடுத்தார். இப்பயிற்சிக்குப்பின் இதனை மகளிர் குழு உறுப்பினர்களுக்கும் கூறி வருகிறேன். எங்களுடைய வீட்டில் 3 எருமை மாடுகள் உள்ளன. ஒரு மாட்டின் காம்பிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்தது. இதற்கு கால்நடை மருத்துவரை அனுகி சிகிச்சை செய்தேன். அவரும் இதற்கு மருந்தை ஊசி மூலம் செலுத்தி ரூ. 500 பெற்றுக் கொண்டார். இரு முறை ஊசி போட்டார். பின்னர் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சியில் சொல்லிக் கொடுத்ததன்படி 3 எலுமிச்சம் பழம் சாறு பிழிந்து கருவேப்பிலையுடன் அரைத்து ஒரு நாளைக்கு 2 முறை செய்து வர 4 நாட்களில் அது முற்றிலும் குணமானது. இந்த முறையை மாதத்திற்கு 2 தடவை முன்காப்பாகவும் செய்து வருவதால் நோய் வருவதில்லை. கோடை மற்றும் மழைகாலங்களில் ஈ தொல்லை காணப்படும். இது மாட்டு இரத்தத்தை உறிஞ்சி சேதாரம் கொடுக்கும். இதற்கு ஓம விதைகளை அரைத்து காய்ச்சி கசாயம் செய்து இத்துடன் எண்ணெய் சிறிது கலந்து மாட்டு மீது தடவ ஈ தொல்லை நின்றுவிட்டது.

நிசுகுமாரி,
தாத்ரா கிராமம், பிராக்பூர் வட்டாரம்,
கங்டா மாவட்டம், ஹிமாசலபிரதேசம்,
செல் : 8278797454

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 300 | 2500 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 200 | 2000 |
| தனிப்பிரதி | 40 | ---- |
| 10 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1500) + ( கொரியர் செலவு ரூ. 300 ) | 1800 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் “சேவா” மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , செல்–9344523892

Printed by Chitra Printers at
253/B, Jawaharlal Nehru Road
Near Baby store
Parasakthi colony.
Sivakasi.
Cell:8489222655

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar, 3rd Street
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 9344523892
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in

நூல் அஞ்சல்

பெறுநர்

-------------------------------------

-------------------------------------

-------------------------------------

-------------------------------------